

# தொண்டன்

ஆரம்பம் - 1969

நவம்பர் - 2003

12/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

**நவம்பர் - 2003**

மலர் 35 ❖ இதழ் 07

**ஆசிரியர்**
J. A. G. இரட்ணகுமார்

**இணை ஆசிரியர்**
மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**
மெற்றில்டா இராஜேந்திரம்
செல்லத்துரை ஜெயராஜா
பெஸ்லீயோ வாஸ்

**வெளியீடு**
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு/மட். மறை மாவட்டம்

**முகவரி**
சமூகத் தொடர்பு நிலையம்.
அ.பெ. எண் - 44
மட்டக்களப்பு

**SOCIAL COMMUNICATIONS CENTRE**
**P. O. BOX - 44**
**BATTICALOA. 30000**
**TEL: 065 - 2226486**

விலை – 12/=
ஆண்டுச்சாந்தா : 190/=
ஆறுமாதச் சந்தா 100/=
(தபாற்செலவு உட்பட)




## உள்ளே


அன்புடன் உங்களோடு – 01
வெள்ளிவிழாக் கண்ட திருத்தந்தை – 02
வெள்ளிவிழா நாயகர் – 05
பாராட்டுகிறோம் – 08
பாடு – 09
ஓவியர் வாசனுடன் – 10
எங்கே போகின்றாய் – 12
இலக்கிய மஞ்சரி – 13
உருமாறும் தமிழ் – 15
மாணவர் பக்கம் – 17
சமாதானம் யாருக்கு – 20
அன்னை குவாடலூப் திருநாள் – 21
உயிர் வளர்க்கும் பிராணாயாமம் – 22
விவிலியம் கற்போம் – 23
அறிவை வளர்ப்போம் – 24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு....

வாழ்கின்றவர்களோடு வாழ ஒரு காலம்
இறந்தவர்களை நினைத்துப்பார்க்க ஒரு காலம்.
அதுதான் நவம்பர் மாதத்தின் சிறப்பம்சமாகும்.
சொந்தபந்தங்களை மறக்காமல்
அவர்களை நினைத்துப் பார்க்க
வழி வகுத்தது திருச்சபை.

இறந்தவர்கள்
இறைவனோடு வாழ வேண்டும் என்பதற்காக
நாம் ஒப்புக்கொடுக்கும்
திருப்பலிகள், செபங்கள்- அவர்களுக்கு
ஆறுதலாய் இருக்கும் என்பது
திருச்சபையின் நம்பிக்கை

இறந்தவர்களுக்காக
இறைவனிடம் இறைஞ்சினால் - அவர்கள்
நன்றி மறவாத ஆன்மாக்களாய் இருந்து
நமக்காகப் பரிந்து பேசுவார்கள் - என்பது
சிலரது ஆழமான நம்பிக்கையாகும்.

இருக்கிறவர்கள் இறந்தபின் - நாம்
அவர்களோடு கொள்ளும் தொடர்பை விட
இருக்கின்றவர்கள் இறக்க முன் - நாம்
அவர்களோடு கொள்ளும் தொடர்பு
முக்கியத்துவம் வாய்ந்தது - இப்படியாக
உயிர்வாழும் போது
உறவுகள் குலையாமல்
உணர்வுகள் பாதிக்கப்படாமல்
உயிருக்குயிராய் வாழ வேண்டும்.
அதுதான் அர்த்தம் உள்ளது.



இருக்கின்ற பொழுது - ஒருவரை
துன்புறுத்திவிட்டு - இறந்தபின்
அவருக்காகக் கண்ணீர் வடிப்பது
சில வேளைகளில் - வெளி வேடமாகப்
போகலாம்

நீ இறப்பதற்கு முன்னால்
எல்லாரோடும் உறவோடு
வாழக் கற்றுக் கொள்.
அப்படி வாழ்ந்தால்
உன் இறப்பு - நிச்சயம்
ஓர் உயிர்ப்பாகும்.

-ஆசிரியர்-



இறைவாக்கு

மனிதருடைய வாழ்நாள் குறுகியது: பயனற்றது: நிழலைப்போல மறைவது, அதில் தமக்கு நலமானது எது என்பதை யாரால் அறியக் கூடும்? சபைஉரை:6/12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளி விழாக்கண்ட
## திருத்தந்தை வாழியவே!

அருளாட்சிப் பணியில்
ஐயைந்து ஆண்டுகளாய்
இருந்தார் நமதன்பின்
திருத்தந்தை அதை மகிழ்ச்சிப்
பெருக்கோடு பாடிநலம்
பெருகவென வாழ்த்திடுவோம்

போலந்தில் பிறந்துநிதம்
போராடி வளர்ந்தமகன்
சீலங்கள் நிறை கல்விச்
சிகரத்தில் ஏறியருட்
கோலத்தை ஏற்று இறை
சேவைக்கு அர்ப்பணித்தார்

சாதனைகள் பலபுரிந்து
சரித்திரங்கள் பலபடைத்து
வேதனைகள் உற்றவர்தம்
விடியலுக்காய்த் தினமுழைத்து
பாதமலர் பதித்துப்பல
பயணங்கள் செய்தவராம்

உலகின் பெருந்தலைவர்
உலகமக்கள் நண்பனவர்
கலங்கரை விளக்கமவர்
காட்சிக்கு எளியனவர்
துலங்கும் விசுவாச
விடிவெள்ளி எங்களுக்கு

தள்ளாத வயதினிலும்
தளராது பணிபுரியும்
உள்ளத்தால் உயர்ந்தபெரு
உத்தமரைப் போற்றிடுவோம்
வெள்ளிவிழாத் தாண்டியவர்
பல்லாண்டு வாழியவே!




மலர்வேந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளி விழா நாயகர்

## திருத்தந்தை 2ம் யோவான் பவுல்



திருத்தந்தை தலைமைப் பணியேற்ற 25வது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்கள் கடந்த 19ந் திகதி (19 - 10 - 2003) நடைபெற்றன. கத்தோலிக்க உலகம் கொண்டாடிய மாபெரும் விழாவாக அமைந்த இக் கொண்டாட்டம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதனை ஒட்டி உலகெங்கும் பல நிகழ்வுகள் நடந்தன. அவற்றுள் அன்புப் பணிக்கென தம்மை அர்ப்பணித்த அன்னைத் திரேசாவுக்கு புனிதைப் பட்டத்துக்கு முன்னோடியாக அளிக்கும் முத்திப்பேறு பெற்றவர் பட்டம் வழங்கப்பட்டது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

1978ம் ஆண்டு திருத்தந்தையாகப் பதவி ஏற்ற தூய 2ம் யோவான் பவுல் 'என் ஆடுகளை மேய்' என்ற இயேசுவின் கட்டளையைச்சிரமேற் கொண்டு ஆற்றிய திருப்பணியில் இருபத்தியைந்து ஆண்டுகளை நிறைத்து நீண்ட காலம் பதவி வகித்த திருத்தந்தையருள் ஒருவராகத் தடம் பதித்துள்ளார்.

பன்னிரு சீடர்களுள் தலைமைச் சீடராக விளங்கிய பேதுருவை இயேசு அழைத்து 'நீ பாறையாக இருக்கிறாய். உன் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். விண்ணுலகின் திறவு கோல்களை நான் உன்னிடம் தருவேன். மண்ணுலகில் நீ தடைசெய்வது விண்ணுலகிலும் தடை செய்யப்படும் மண்ணுலகில் நீ அனுமதிப்பது விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும்' என்று சொன்னார். இவ்வாறு கிறீஸ்து தாம் கட்டிய திருச்சபையின் அதிகாரமுள்ள தலைவராக புனித பேதுருவை நியமித்ததை மத்தேயு நற்செய்தி நவில்கிறது. அந்தப் பேதுருவின் வழிவந்த 264வது திருத்தந்தையாக 2ம் யோவான் பவுல் விளங்குகிறார்.

அவரது வரலாறு சாதனைகள் நிறைந்தது: சோதனைகள் மிகுந்தது: மரபுகள், சம்பிரதாயங்கள் பலதையும் உடைத்தது. பன்னூறாண்டு கால வரலாற்றிலே இத்தாலிக்கு வெளியே இருந்து வந்த முதலாவது திருத்தந்தையாக, வயதில் இளைய திருத்தந்தையாக 2ம் யோவான் பவுல் விளங்குகிறார். இத்தாலிக்கு வெளியே இருந்து திருத்தந்தை வரமுடியுமோ என்ற அவநம்பிக்கைகளைத் தவிடுபொடியாக்கி உலகம் எதிர்பாராதவாறு கிழக்கைரோப்பிய கம்யூனிச நாடான போலந்திலிருந்து திருத்தந்தை தெரிவானது ஓர் ஆச்சரியம் நிறைந்த நிகழ்வு.

போலந்து நாட்டில் கிராக்கோ நகருக்கருகில் அமைந்த வாடோவிஸ் என்ற சிறிய நகரில் 1920ம் ஆண்டு மே மாதம் 18ம் திகதி பிறந்தார். இவருக்குப் பெற்றோர் சூட்டிய பெயர் கரோல் வொய்ரிலா. இவரது தந்தை கரோல், இராணுவத்தின் கீழ்ப்பிரிவில் ஓய்வு பெற்ற ஒருவர். தாய் எமிலியா. ஒரேயொரு சகோதரன் எட்மண்ட். இவரது சகோதரன் இவர் பிறப்பதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பு பிறந்தவர். அவர் ஒரு மருத்துவர். கரோல் வொய்ரிலா சிறு வயதிலிருந்தே தொடர்ச்சியான பல இழப்புக்களைச் சந்திக்கத் தொடங்கினார். சிறுவனாக இருக்கும் போதே அவரது சகோதரன் தொற்றுக் காய்ச்சலினாற் பீடிக்கப்பட்டு இறந்துவிட்டார். ஒன்பது வயதாயிருக்கும் போதே தாயை இழந்த இவருக்கு தந்தை மட்டுமே துணையாக இருந்தார். 21 வயது நடக்கும் போது (1941) ஒரே துணையாக இருந்த தந்தையையும் இழந்தார். தந்தையின் பிரிவு இவருக்குத் தனிமையின் துயரத்தைக் கற்றுக் கொடுத்தது.

யாருமற்ற அனாதையாக இறைவன் அவரை விட்டுவிடவில்லை. நண்பனொருவனின் வீட்டில் புகலிடம் கிடைத்தது. தந்தையின் இறப்பிற்குப் பிறகு இவரது வாழ்வில் பெரிய மாற்றத்தைக் கண்டதாக இவரது நண்பர் சான்று பகர்ந்துள்ளார். மத விடயங்களில் அதிக ஈடுபாடு காட்டத் தொடங்கினார். இறையியலையும் கற்றார். சிறு பையனாக இருந்தபோது திருப்பலிக்கு உதவி செய்யும் சிறுவர்களில் முதல்வனாக இருந்தார். ஆனால் குருவாக வருவதில் எவ்வித விருப்பமும் காட்டவில்லை. தாயையும் தந்தையையும் இழந்த பின் இறைவனே தந்தையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவும், தாயாகவும் இருந்து தன்னை வழி நடத்துவதை உணர்ந்து அந்த இறைவன் பணிக்குத் தன்னை முற்றாக முழுமையாக அர்ப்பணித்தார். இதுவே அவரது குருத்துவ அழைத்தலின் ஆரம்பமாக இருந்தது. இவரது குருத்துவ அழைத்தலுக்குப் பக்கபலமாக இருந்தவர் கருதினால் சாபியா. இரண்டாம் உலக யுத்தம் மூண்ட பொழுதும் ஜேர்மனியின் படைகள் போலந்தை முற்று கையிட்ட போதும் இவரது இறையியல் கல்விக் குத்தடை ஏற்படவில்லை. பட்டினி, சித்திரவதை, இனப் படுகொலை இவை அனைத்தின் மத்தியிலும் அவரது குருத்துவப் படிப்பு தொடர்ந்தது. இறுதியில் 1946ம் ஆண்டு நவம்பர் திங்கள் முதலாம் நாள் குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார்.

குருவான கரோல் வொய்ரிலாவிடம் விளங்கிய திறமைகளை அறிந்த கருதினால் சாபியா, அவர் வளர்ச்சி பெற்றுத் திருச்சபையில் முன்னுக்கு வர வேண்டியவர் என உறுதி பூண்டு உயர் கல்விக்காக உரோமைக்கு அனுப்பினார். உரோமை செல்லும் வழியில் பெல்ஜியம், ஒல்லாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்திருந்த தன் நாட்டு மக்கள் மத்தியில் பணியாற்றும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. உரோமையில் இறையியலில் பட்டப் படிப்பை முடித்துக்கொண்டு 1948ல் நாடு திரும்பினார். போலந்து தேசம் பெரும் மாற்றத்திற்குள்ளாயிருப் பதைக் கண்டார். அதாவது போலந்து அரசாங்கம் கம்யூனிஸ்டுகளுடைய கைக்கு மாறியிருந்தது. யுத்தத்தின் பிறகாவது விடுதலைக் காற்று வீசுமென எதிர்பார்த் தவருக்குச் சூறாவளிக் காற்றை எதிர்கொள்ள வேண்டிய சவால் விடுக்கப்பட்டிருப்பதை உணர்ந்தார்.

கம்யூனிச அரசும் போலந்துத் திருச்சபையும் நாயும் பூனையும் போன்றிருந்த வேளையில் கருத்து மோதல்களுக்கும், பழிவாங்கல்களுக்கும் குறை வில்லை. கரோல் வொய்ரிலா எதிலும் விட்டுக் கொடுக் கவில்லை. அவர் எதையும் கண்டு அஞ்சவில்லை. துணிவுடன் பணியில் இறங்கினார். படிப்படியாக ஆனால் வெகு விரைவாக அவரது பணியும் பதவியும் உயர்ந்து கொண்டே சென்றன. 1958ல் ஆயராகவும், 1963ல் பேராயராகவும், 1967ல் கருதினாலாகவும், 1978ல் திருத்தந்தையாகவும் உயர்த்தப்பட்டார் என்றால் அதன் காரணம் சொல்லாமலே புரிந்து கொள்ளமுடியும். தனிப்பட்ட ஆற்றல், விடாமுயற்சி, கடின உழைப்பு, தெளிந்த சிந்தை, சிறந்த செயலாட்சித்திறன் எல்லா வற்றிற்கும் மேலாக அவரிடம் ஊறிப்போயிருந்த இறை நம்பிக்கை. இவையனைத்தும் ஒருங்கிணைந்தவராக விளங்கியதனால்தான் கரோல் வொய்ரிலா இன்று உலகம் போற்றும் தனிப் பெரும் தலைவராகத் திகழ் கிறார். வானத்திலே ஆயிரமாயிரம் நட்சத்திரங்கள் பூத்திருந்தாலும் ஒருசில பிரகாசமாகக் கண்களைக் கவர்வனவாக உள்ளன. அதுபோன்று எம் திருத் தந்தையின் வாழ்வில் ஆயிரமாயிரம் நற்பண்புகள் விளங்கினாலும் ஒரு சில எம் கவனத்தை ஈர்க்கக் கூடியனவாக உள்ளன. அவற்றை ஈண்டு கோடிட்டுக் காட்டுவதே என் விருப்பம்.

## இவர் ஒரு சிறந்த எழுத்தாளர்

இவர் ஆரம்பக் கல்வி கற்கின்ற காலத்திலேயே சிறு கவிதைகள் எழுதும் திறமையையும் வளர்த்துக்கொண்டார். கல்வியில் உயர உயர கவிதை யாற்றலும் கைவந்த கலையாக மாறியது. பதவிகளும் பணிகளும் படிப்படியாக உயர்ந்தபோதும் கவிதைகள் வடிப்பதை மட்டும் கைவிடவில்லை. குறிப்பாக அவரது கவிதைகள் 1940க்கும் 1975க்கும் இடைப்பட்ட காலத்தில் அதாவது அவர் குருவாக, ஆயராக, பேரா யராக, கருதினாலாக இருந்த காலகட்டத்தில் எழுதப் பட்டவையாகும். அநேகமாக அவரது கவிதைகள் அனைத்தும் மதக் கோட்பாடுகளைத் தத்துவரீதியில் நோக்கும் ஒரு மேய்ப்பனின் சுயசிந்தனையின் வெளிப் பாடாக அமைந்துள்ளன. இறைவனது வியத்தகு படைப்பின் சிகரமாகிய மனிதப் படைப்பின், மனித வாழ்வின் நோக்கம் என்ன என்பதை அறிவதில் அவர் கொண்ட தணியாத் தாகம் கவிதைகளாக, கட்டுரை களாக வெளிவந்தன. எத்தனை ஆயிரம் வேலையிருப் பினும் அவர் இதுவரை காலமும் தனது பேனாவுக்கு ஓய்வு கொடுக்கவில்லையென்றால் மிகையாகாது. பல நூல்களையும் பல்லாயிரக்கணக்கான கவிதைகளை யும், கட்டுரைகளையும் எழுதிக்குவித்துள்ளார். திருச்ச பையின் தலைமைப் பொறுப்பை ஏற்ற பிறகும் கூட அவர் எழுதிய சுற்றுமடல்களுக்கு அளவில்லை: தொடர்ந்தும் எழுதிக் கொண்டிருக்கின்றார்.

திருத்தந்தையின் நூல் ஒன்று இந்த நூற் றாண்டின் மிகச்சிறந்த விற்பனை நூலாகக் கருதப் படுகிறது. இந்நூல் 39 நாடுகளில் 21 மொழிகளில் விற்பனைக்கு வந்துள்ளது. அமெரிக்காவில் மட்டும் 18 இலட்சம் பிரதிகள் விற்பனையாகின. மொத்தம் 2கோடி நூல்கள் விற்பனையாகுமென எதிர் பார்க்கப் படுகின்றது. (CROSSING THE THRESHOLD OF HOPE) 'நம்பிக்கையின் நுழைவாயிலைக் கடத்தல்' என்ற 230 பக்கங்களைக் கொண்ட இந்நூலில் கருச்சிதைவும் பெண்களும் என்பது முதல் புத்தர், மார்க்சிஸம் வரை யிலான பல்வேறு அம்சங்களில் பாப்பரசரின் கருத் துக்கள் அடங்கியுள்ளன. சிறந்த விற்பனை நூலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமின்றி நீண்டகால விற்பனை நூலாகவும் இருக்குமென பலரும் கருதுகின்றனர்.

திருத்தந்தை எழுதியவையோ எண்ணற்றவை எல்லாவற்றையும் வெளியிட வேண்டுமென அவர் விரும்பவில்லை. வெளியிடப்படாதவை நிறைய உண்டு. எதிர்காலத்தில் அவை வெளியிடப்பட்டு அவற்றைப் படித்து இரசிக்கும் பேறு எமக்குச் கிட்டி னால் நாம் பேறுபெற்றவர்கள்.

## அவர் ஓர் ஆற்றல் மிகுந்த பேச்சாளர்

கவிதைத் துறையில் மாத்திரமல்ல நாடகக் துறையிலும் கைதேர்ந்தவர். சுருக்கமாகக் கூறினால் சிறந்ததொரு நடிகர். கல்லூரி நாட்களிலேயே குட்டி நாடகங்களை எழுதி மேடையேற்றி நடித்துப் பலரது பாராட்டையும் பெற்றிருக்கிறார். நாசிசவாதிகளினால் திணிக்கப்பட்ட கட்டாய அடிமை ஊழியத்தைப்பற்றி எழுதிய நாடகத்தில் பரிசையும் பெற்றார். யோபுவைப் பற்றி இவர் எழுதிய நாடகம் இன்னும் வெளியிடப் படாமல் உள்ளது.

நடிகர் நிச்சயம் பேச்சாற்றலையும் கொண் டிருப்பர். இவரும் அதற்கு விதிவிலக்கல்ல. சிறு பைய னாக இருந்தபோது ஒரு தடவை கருதினால் சாபியா இவரது ஊருக்கு வந்திருந்தபோது கருதினாலை வரவேற்றுப் பேசும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. அவரது பேச்சாற்றலில் விளங்கிய தெளிவையும் அறிவுத் திறமையையும் மெச்சிய கருதினால் ஒரு குரு வாகவர விருப்பமில்லையா என இவரைக் கேட் டாராம். அதற்கு அவர் நான் பல்கலைக்கழகத்திற்குச் சென்று வரலாறு படிக்கப் போவதாகக் கூறிவிட்டார்.

குருப்பட்டம் பெற்ற பிறகு பங்குகளில் மறை யுரையாற்றிய பொழுதும்சரி, பல்கலைக்கழகத்தில் விரி வுரையாற்றியபோதும்சரி, இவரது உரையைக் கேட்க எப்போதும் மக்கள் கூட்டம் நிரம்பி வழியும். பல்கலைக் கழகத்தில் இவரது விரிவுரைக்குத்தான் மாணவர்கள் முண்டியடித்துக்கொண்டு வருவார்கள். திருத்தந்தை 6ம் சின்னப்பர் 1976ம் ஆண்டு பெப்ரவரி மாதம் வத்திக் கானில் தவக்காலத் தியானத்தை நடாத்துமாறு இவ ருக்கு அழைப்பு விடுத்திருந்தார். அதன்படி இவர் திருத்தந்தை 6ம் சின்னப்பருக்கும். வத்திக்கான் நகரில் இருந்த கருதினால்கள், ஆயர்கள், குரு சிரேஸ்டர்கள் மற்றும் குருக்கள் அனைவருக்கும் சிறந்ததொரு தியா னத்தை நடத்தி அவர்களை ஆன்மீகவழியில் இட்டுச் சென்றார். இவையனைத்தும் அவரது பேச்சாற்றலுக்குச் சான்று பகர்கின்றன.

## ஏழைகளின் நண்பர்

ஏழைக் குடும்பத்தில் பிறந்த அவர் வறுமை என்றால் என்ன என்பதை அனுபவித்தவர். ஏழை எளியோர் மீது பரிவும் இரக்கமும் கொண்டவர். எளிமை வாழ்வையே விரும்பினார். அவர் கருதி னாலாக நியமிக்கப்பட்டபோது அவர் உறங்குவதற் கென பெரியதொரு ஆடம்பரமான, சகல வசதிகளும் அடங்கிய படுக்கையறை கொடுக்கப்பட்டதாம். அவர் அதனை மறுத்து விட்டு சாதாரண சிறியதொரு அறை யில் சொகுசுகளற்ற படுக்கையைத் தேர்ந்து கொண் டார். அவரது கார்ச்சாரதி அவரது எளிமையைப் பற்றி பின்வருமாறு கூறுகிறார். 'கருதினாலை நினைத்தால் வெட்கமாக உள்ளது. ஏனெனில் அவர் உடுத்துவது பழைய கசங்கிய அங்கி, காலில் அணிவது தேய்ந்து போன செருப்பு' இவற்றிலிருந்து அவரின் எளிமை வாழ்வை உணரலாம். விற்பனைக்கு வந்த அவரது நூலினால் கிடைத்த தொகையை, அதாவது விற்பனை விலையில் 15 சதவீதமான 300 கோடி ரூபாவினை (6கோடி டாலர்) தர்ம ஸ்தாபனத்திற்கு வழங்கியிருப்பது ஆதரவற்றவர்கள்மேல் அவருக்கிருக்கும் அக்கறை யைக் காட்டுகின்றது. மனிதன் மனிதனாக தலை நிமிர் ந்து வாழமுடியாமல் அவனைத் தடுத்து வைக்கும் வறுமை எனும் கொடிய அரக்கனின் கோரப்பிடியிலி ருந்து முழுமனித விடுதலைக்காக ஆவன செய்யக் கோரி அனைத்து நாட்டுத் தலைவர்களுக்கும் அறை கூவல் விடுத்துள்ளார்.

இவ்விதமாக ஏழைகளின் நண்பராக, குரலற் றவர்களின் குரலொலியாக முழுமனித விடுதலைக் காகப் பாடுபடுகின்றார். இதனால் முழு மனித விடுத லைக்காக மனுவுரு வெடுத்த இயேசுக் கிறீஸ்துவின் அன்பையும் அருளையும் உலகெங்கும் ஊடுருவச் செய்கின்றார்.

## திருத்தந்தையின் திருப்பயணங்கள்.

திருத்தந்தை 6ம் சின்னப்பர்தான் முதன் முதல் விமானத்தில் பறந்த பாப்பரசராகவும், ஐந்து கண்டங் களையும் தரிசித்த பாப்பரசராகவும் சாதனையை நிலை நாட்டினார். ஆனால் அவரது வழிவந்த திருத்தந்தை 2ம் யோவான் பவுல் முன்னைய திருத்தந்தையரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயாண சாதனைகள் அனைத்தையும் முறியடித்தது மன்றி நூற்றுக்கு மேற்பட்ட பயணங்களைச் செய்துள்ள முதல் பாப்பரசராகவும் உள்ளார். இத்தாலியிலும் வெளியிலும் அவர் பயணம் செய்துள்ள தூரத்தைக் கணக்கிடும்போது பூமிக்கும் சந்திரனுக்கும் இடையே உள்ள தூரத்தின் மடங்குக்கும் மேலாக பயணம் செய்துள்ளதாகக்கூறப்படுகிறது. (பூமிக்கும் சந்திரனுக்கும் இடையே உள்ள தூரம் 230, 644 மைல், 384, 440 கி.மீ) அதாவது உலகின் 170 நாடுகளில் 125ற்கும் மேற்பட்ட நாடுகளைச் சந்திந்து விட்டார். சில நாடுகளுக்கு ஒரு தடவைக்குமேல் பயணங்களை மேற்கொண்டுள்ளார். இவை தவிர தமது மறைமாநிலமான உரோமையின் பங்குகளில் பெரும்பாலானவற்றையும் தரிசித்துவிட்டார். ஆம் அவர் ஒரு பயணம் செய்கின்ற திருத்தந்தை. அவரது பயணங்கள் திருப்பயணங்களாக உள்ளன.

திருத்தந்தை எதற்காக இத்தனை பயணங்களை மேற்கொள்கின்றார் எனப் பலரும் வினாத் தொடுக்கின்றனர். ‘உலகெங்கும் செல்லுங்கள்’ என்ற இயேசுவின் கட்டளையைச் சிரமேற்கொண்டு தன் சகோதரர்களை விசுவாசத்தில் ஊக்குவித்து உறுதிப் படுத்துவதும் தலத்திருச்சபைக்கும் தாய்த்திருச் சபைக்கும் இடையே உள்ள ஒன்றிப்பை வலுப்படுத்தி நெறிப் படுத்துவதுமே அவர் பயணங்களை மேற்கொள் வதன் முக்கிய நோக்கமாகும். ஏனெனில் கத்தோலிக்க ஒன்றிப்பின் அடையாளமாகவும் பிணையாகவும் திகழ்பவர் அவரே.

தலத் திருச்சபைகளைத் தரிசிக்கின்ற அவரது பணி மேய்ப்புத் திட்டத்தில் முக்கிய பங்கை வகிக்கின்றது. தலைமை ஆயனாகிய அவரது தரிசிப்புக்கள் தலச் திருச்சபையின் நிலைமைகளை, பிரச்சினைகளை நேரிலே கண்டறிய உதவுவதுடன் தலத்திருச்சபை தங்கள் தலமை ஆயரை நேரிலே சந்திக்கவும், அவரது உற்சாகமூட்டும் வார்த்தைகளைக் கேட்டறியவும், சிறந்ததொரு சந்தர்ப்பமாக அமைந்து விடுகின்றன. அத்தோடு உலகளாவிய ரீதியில் உள்ள ஏனைய கிறீஸ்தவ சபைகளுடனான ஒன்றிப்பை செயல்முறைப்படுத்தி பிறமதங்களின் தலைவர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவும் அரிய வாய்ப்பாக உள்ளது.

இத்தகைய நோக்கங்களுடன் மேலுமொரு முக்கிய பணியை இப்பயணங்கள் மூலம் அவர் சாதிக்கின்றார். அதாவது மனிதனை மனிதனிடமிருந்து பிரிக்கும் இன, மத, மொழி, நிறம், தேசம், என்பவற்றை நீக்கி எல்லோரும் ஒரு தந்தையின் பிள்ளைகள் என்ற பாசப் பிணைப்பை ஏற்படுத்தி வருகின்றார். வெவ்வேறு நாட்டுத் தலைவர்களுடன் நடைபெறும் சந்திப்பில் யுத்த நிறுத்தங்கள், சமாதானப் பேச்சுவார்த்தைகள் சமாதான ஒப்பந்தங்கள் ஆகியவற்றை வலியுறுத்தவும் அவரால் முடிகின்றது.

## திருத்தந்தையும் நற்செய்தி அறிவிப்பும்.

‘திருச்சபை, நற்செய்தி அறிவிக்கவே’ என்பது எம் திருத்தந்தையின் விருது வாக்காகும். ‘நற்செய்தி அறிவிக்காவிடில் எனக்கு ஐயோ கேடு’ என்ற புனித பவுலின் நாமத்தைக் கொண்ட நம் திருத்தந்தை நற்செய்தி அறிவிப்பில் காட்டும் ஈடுபாடு அவரது போதனைகளிலும் சிறப்பாக உலக நாடுகளுக்கான அவரது திருப்பயணங்களிலும் வெள்ளிடைமலையாக உள்ளது. 1986ம் ஆண்டிற்கான உலக நற்செய்தி அறிவிப்புத் தினமன்று திருத்தந்தை விடுத்த செய்தியில், நற்செய்தி அறிவிப்பின் மேல் அவர் கொண்டுள்ள வேட்கையை பின்வரும் வரிகளில் புரிந்து கொள்ள முடியும். அவர் கூறுகையில் ‘நான் திருத்தந்தையாக ஏற்படுத்தப்பட்ட நாள் தொடக்கம் இன்றுவரை கிறீஸ்துவை அறியாதவர்களுக்கு இறையரசின் நற்செய்தியை எடுத்தியம்புவதே தலைமை ஆயனாகிய எனக்கு விடுக்கப்பட்ட சவாலாகவும், என்மேல் சுமத்தப்பட்ட பாரிய பணியாகவும் அமைந்தது. எனவே எனக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களையெல்லாம் நழுவவிடாமல் கிறீஸ்துவை அறியாத எண்ணற்ற மக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களுடன் ஆன்மீக செல்வங்களைப் பகிர்வதுடன் அவர்களது தேவைகளிலும் துன்பங்களிலும் பங்கு கொண்டு கிறீஸ்தவ விசுவாசத்தை அவர்களது பண்பாட்டில் ஊன்றச் செய்வதே எனது பணியாக அமைந்தது’ என தெளிவான விளக்கமளிக்கின்றார்.

இவ்வாறு பல சுற்று மடல்களிலும் உரைகளிலும் திருச்சபையின் நற்செய்தி அறிவிப்புப் பணி பற்றி வலியுறுத்தி வருகின்றார். அவரது நீண்ட திருப்பயணங்கள் அதற்குச் சான்று பகர்கின்றன. ஒட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்தமாகக் கூறப்படின் அவை அவரது விசுவாசப் பயணத்தில் செபத்தின் தேடல்களாக, தியானத்தின் வெளிப்பாடுகளாக உள்ளன.

எமது திருத்தந்தையின் வாழ்வில் காணக் கூடிய நற்பண்புகளை, அவரது இறையியல் சிந்தனைகளை, கொள்கை விளக்கங்களை, செயல் திறமைகளை அடுக்கிக் கொண்டே போகலாம் விசேடவிதமாக அவர் உலகரங்கில் சமாதானத்தின் தூதுவனாக இருந்து கொண்டு ஆற்றும் பணிகளுக்கு அளவில்லை. சுருங்கக் கூறின் உலகத்தலைவர்கள் எவராயிருப்பினும், எந்த விடயமாயிருப்பினும் திருந்தந்தையின் குரலுக்குச் செவி சாய்க்கக் கூடிய விதத்தில் பொதுத் தலைவனாக, நல்லதொரு ஆயனாக இன்று திகழ்கின்றார் என்றால் அந்தப் பெருமை எம் திருத்தந்தை 2ம் யோவான் பவுலையே சாரும்.

இந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த தலைவர் என்று உலகத் தலைவர்கள் பலராலும் பாராட்டப் பட்டுள்ள அவர் 100 கோடி கத்தோலிக்க மக்களின் ஆன்மீகத் தலைவர் என்றாலும் உலக அரங்கில் செல்வாக்கு மிக்க பேச்சாளராகவும் அனைவரும் மதிக்கும் பெருந் தலைவராகவும் திகழ்பவர். அத்துடன் உலகின் மிகச் சிறிய நாடான வத்திகான் நாட்டின் அரசுத் தலைவரும் அவரே. உலகில் எங்கு அநீதி நிகழ்ந்தாலும், மனித மாண்பு மிதிக்கப்பட்டாலும் உரத்து ஒலிக்கும் அவரது குரல். அதே வேளை ஆதரவற்றோருக்கும், ஒடுக்கப்பட்டோருக்கும், அவலங்களுக்குள் சிக்கித் தவிப்போருக்கும், ஆதரவுக் கரம் நீட்ட முன்னிற்பவர். தன்னைக் கொல்ல முயன்ற கொலைகாரனையும் மன்னித்து உறவு கொண்டாடிய பெருந்தகையாளர்.

தற்போது 84 வயதை அடைந்துள்ள திருத் தந்தை முதுமையாலும், நோயினாலும், உடல் உபாதைகளாலும் மிகவும் தளர்ந்துள்ளார். அவரது உடல் நிலை மிகவும் மோச மடைந்துள்ளதாகவே அண்மைக் காலச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆயினும் அவர் மிகுந்த துணிவோடும் மனத்திடத்தோடும் இருப்பதை அவரது உரைகளும், திருப்பயணங்களும் எடுத்துக் காட்டுகின்றன.

கத்தோலிக்க மக்களின் தலைவனாகவும் அதேவேளை உலகமக்கள் அனைவருக்கும் நம்பிக்கை நிறைந்த நண்பனாகவும் வழிகாட்டியாகவும் விளங்கும் திருத்தந்தை இன்னும் நீண்ட காலம் வாழ்ந்து அருளாட்சி புரிய இறைஞ்சுவோம்.

## இப்படியும் சில பெயர்கள்

| | |
|---|---|
| இந்து சமுத்திரத்தின் முத்து | – இலங்கை |
| இருண்ட கண்டம் | – ஆபிரிக்கா |
| இடிமின்னல் நாடு | – பூட்டான் |
| இந்தியாவின் நறுமணத் தோட்டம் | – கேரளம் |
| அரண்மனை நகரம் | – கல்கத்தா |
| அதிகாலை அமைதி நாடு | – கொரியா |
| அழியாத நகரம் | – உரோமாபுரி |
| ஆயிரம் வாவி நாடு | – பின்லாந்து |
| உலகின் கூரை | – திபெத் |
| உலகின் சர்க்கரைக் கிண்ணம் | – கியூபா |
| ஐரோப்பாவின் நோயாளி | – துருக்கி |
| எகிப்தின் கொடை | – நயில்நதி |
| சூரியன் உதிக்கும் நாடு | – ஜப்பான் |
| சூரியன் மறையும் நாடு | – இங்கிலாந்து |
| நள்ளிரவுச் சூரிய நாடு | – நோர்வே |
| புயல் அடிக்கும் நகரம் | – சிக்காக்கோ |
| பரிசுத்த பூமி | – பலஸ்தீனம் |
| சீனாவின் துயரம் | – குவாங்கோ நதி |
| தடுக்கப்பட்ட நகரம் | – லாசா |
| தங்கப்போர்வை நாடு | – அவுஸ்ரேலியா |
| பொற்கோவில் நகரம் | – அமிர்த சரஸ் |
| ஏழு குன்று நகரம் | – ரோம் |

செல்வன் டெம்ஸ்ரன் செலர்
தரம் 6 H
மட்/வாழைச்சேனை, இந்துக்கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாராட்டுகிறோம்

திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னக்கடை புனித குவாடலுப் மாதா பங்கைச் சார்ந்த ஜே. எஸ் மரியதாஸ் திருகோணமலை மாவட்டநீதவான் ஈ. ரீ. ஏ பாலசிங்கம் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் காலம் சென்ற ஜோசப் செபமாலை தம்பதியினரின் புதல்வராவார். சிறந்த சமூக சேவையாளரான இவர் சிறு வயதில் பூசைப் பரிசாரகராக இருந் தவர் மாத்திரமல்ல இன்றுகூட இப்பங்கின் வளர்ச்சிக்காக பல காரியங்களைச் செய்து வருகிறார்.

எழுத்தாளரான இவர் குவாடலுப் அன்னையின் வருடாந்த விழா நாளில் அன் னையின் சுயசரிதை உட்பட ஆலய வரலாற் றையும் தினசரிப் பத்திரிகைகளில் எழுதி வந்துள்ளார். சத்தியப் பிரமாணம் பெற்ற மொழிபெயர்ப்பாளரான இவர் (Swoen Translator) வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகம், கல்வி அமைச்சு, விவசாய அமைச்சு ஆகியவற்றில் கடமையாற்றியுள்ள துடன் தற்பொழுது பிராந்திய உள்ளுராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் கடமையாற்றுகிறார்.

தமிழ், சிங்களம், ஆங்கிலம், ஆகிய மொழிகளில் சரளாமாகப் பேசும் இவர், சிங்கள மொழியில் நல்ல பாண்டித்தியம் பெற்றுள்ளார். திருகோணமலை மாவட்டத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், அரசகரும மொழித் திணைக்களம் ஆகியவற்றால் நடாத் தப்பட்டு வந்த மொழிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் மொழிப் போதனாசிரியராகவும் கடமையாற்றியுள்ளார்.

திருகோணமலை புனித பிரான்சீஸ் சவேரியார் பாடசாலையில் ஆரம்பக் கல்வி யைப் பெற்று அதன்பின் தி/புனித சூசை யப்பர் கல்லூரி தி/சிங்கள மத்திய மகாவித் தியாலயம் ஆகியவற்றில் உயர் வகுப்புக் கல்வியைப் பயின்றுள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்ட சமயம் பேரவைச் செயலகத் தின் முதலாவது ஹென்சாட் ஆசிரியராக நியமிக்கப்பட்டவர் மாத்திரமல்ல அம்மா காணத்தின் வளர்ச்சிக்காக அயராது உழை த்த சிரேஷ்ட ஊழியருமாவார்.

## திருத்தந்தையின் வெள்ளிவிழா நிகழ்வுகள் தேவத்தையில்

**திருத்தந்தை பதவி ஏற்பின் 25வது ஆண்டை ஒட்டி இலங்கை ஆயர் பேரவையினால் ஒழுங்குபடுத்தப்பட்ட தேசிய ரீதியிலான சிறப்பு நிகழ்வு ஒக்டோபர் 11ம் திகதி தேவத்தையில் நடைபெற்றது. இலங்கையின் பல மறைமாவட்டங்களிலிருந்தும் விசுவாசிகள், குருக்கள், துறவிகள் கலந்துகொண்ட இந்நிகழ்வில் திருச்செபமாலைப் பேரணி, தியான உரைகள், திருத்தந்தையின் இலங்கைப் பிரதிநிதி தலைமையில் ஆயர்களின் கூட்டுத்திருப்பலி என்பன நடைபெற்றது. 25 ஆண்டுகளை நிறைவு செய்த முன்றாவது திருத்தந்தையாக 2ம் யோவான் பவுல் விளங்குகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடு

**● கே. ஜே வேலுப்பிள்ளை**

உள்ளத்தைத் தூய்மையாக்கி உண்மையே பேசு - நெஞ்சில்
வெள்ளத்தையனையவீரம் வீங்கிட வாழு- பாரில்
அள்ளத்தான் குறைவிலாத அறந்தனை யாற்று - மற்றும்
கள்ளத்தைக் கபட்டைப் போக்கிக் கண்ணியமாக வாழு!

வேளைக்கு வேளை தூய விமலனைப் புகழ்ந்துபாடு
காலையும் மாலையும் நின் கர்த்தனைப் போற்றிப் பாடு
வாழ்வுதந்தரவணைக்கும் வள்ளலைப்பாடு - உன்னைத்
தாழ்வுறாதணைத்துக் காக்கும் தலைவனை நோக்கிப்பாடு

நெஞ்சினில் நேர்மையேற்று நிலையென வாழு - நாவில்
நஞ்சினை ஊட்டினாலும் நவைகடிந் தொதுங்கி நில்லு
அன்பினாலரணுண்டாக்கி ஆண்மையாலு வகைவெல்லு - தீய
வஞ்சகர் வலையிற்சிக்கா மங்களம் பொங்க வாழு!

இறையடி யார்கள்தம்மை ஏற்றுப சரித்துவாழ்த்து - நம்மில்
மறைதரும் அறிஞர் தம்மின் மதிப்பினை உணர்ந்து போற்று
குறை நிறை தேர்ந்து அன்னார் குறைவுகள் நீக்கப் பாரு
சிறையுறும் அடியார் தம்மின் சிறுமையை நோக்கிப்பாரு!

நறுமலர் சாத்தி மேலோன் நாதன் தாழ் பாடியாடு
சிறுமலர் தூவிச்சிந்து சிந்தையுள் நினைத்துப்பாடு
உறுதுயர் மிடிகள் யாவும் உளத்தினின் றகலப்பாடு
நறுசெப மலரினால்நம் நாதனை நயந்து பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியர் வாசனுடன் ஒரு செவ்வி



- ஆழியோன் -

எமது பிரதேசங்களில் ஏராளமான படைப் பாளிகள் இலை மறைகாய்களாக வாழ்கின்றார்கள். அவர்கள் இனங்காணப்பட்டு வெளிக்கொணரப்பட வேண்டும். அவர்களின் ஆற்றல்கள் மதிக்கப்பட வேண்டும்: மதிப்பீடு செய்யப்பட வேண்டும். இவை யெல்லாம் அவ்வப்பகுதி ஆர்வலர்களால் செய்யப்பட வேண்டிய பணிகள். அத்துடன் ஊடகங்களும் இப் பணியை மேற்கொள்ள வேண்டும். ஆனால் ஊடகங் களையும், படைப்பாளிகளையும் இணைப்பவர் யார் என்பது தான் இன்றைய பிரச்சினை. இவ்வகையில் 'தொண்டன்' இவ்வகையானவர்களை வெளிக் கொணர்வதில் எப்போதும் பின்னிற்பதில்லை. இவ்வரி சையில் இம்முறை வளர்ந்து வரும் இளம் ஓவியர் சுசிமன் நிர்மலவாசன் அவர்களைச் சந்திக்கின்றோம் வயதில் இளையவரான இவர் தனது படைப்புகளில் முதிர்ச்சியைக்காட்டியுள்ளார். செங்கலடி தலத்திருச்சபை யில் உள்ளடங்கும் பங்குடாவெளி என்னும் அழகிய கிராமத்தைச் சேர்ந்த இவர், தற்போது செங்கலடியில் வசித்து வருகின்றார். மட்/புனித மிக்கேல் கல்லூரி தேசிய பாடசாலையில் தொண்டர் ஆசிரியராகப் பணி புரியும் நிர்மலவாசன், அண்மையில் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் தேசிய ரீதியில் நடாத்திய சுவ ரொட்டிப்போட்டியில் முதலிடம் பெற்றுள்ளார். இச்சுவ ரொட்டிகள் தற்போது நாடெங்கும் உள்ள தேவாலயங் களிலும், கத்தோலிக்க திருச்சபையின் சகல பணிம னைகளிலும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

இனி பேட்டிக்கு வருவோம்:

**வினா:** முதலில் உங்களைப் பற்றி சிலவார்த்தைகள் சொல்லுங்கள்

**பதில் :** நான் சுசிமன் நிர்மலவாசன். பங்குடாவெளி கிராமத்தைச்சேர்ந்தவன். தற்போது செங்கலடியில் வசிக்கின்றேன். எனது தந்தையார் தபாற்றிணைக் கள ஊழியர். நான் எனது ஆரம்பக் கல்வியை மட்/ பங்குடாவெளி றோ. க. பாடசாலையிலும், பின்னர் மட்/ செங்கலடி மத்தியகல்லூரியிலும், தொடர்ந்து மட்/ புனித மிக்கேல் கல்லூரி தேசிய பாடசாலையிலும் பெறக்கூடியதாய் இருந்தது. நான் 1982 யூலை 3ம் திகதி பிறந்தேன்

**வினா:** உங்களுக்குள் மறைந்துகிடந்த ஓவியனை வெளிக்கொணர்ந்தது யார்?அல்லது இனங்காட் டியது யார்?

**பதில் :** உண்மையில் எனக்குள் இருந்த ஓவியனை வெளியே பீறிடவைத்தது நான்தான். சிறிய வயதில் நிலத்திலே ஆர்வமாக வரைய ஆரம்பித்தேன். அன்றாட வாழ்க்கையின் பாதிப்புகள் என்னுள் இருந் தன. பூக்கள், மரங்கள் என்பனவற்றை வரை வதனைவிட இந்திய இராணுவம், யுத்த வாக னங்கள் என்பனவற்றை வரைவதையே விரும் பமாகக் கொண்டு இருந்தேன். எனது வரைதல் களை ஆரம்ப காலத்தில் எனது தகப்பனார் திருத்திக் காட்டி யுள்ளார்.

**வினா :** உங்களுக்கு ஓவியங்களைச் சேகரிப்பதில் எப்படி ஆர்வம் உண்டானது? அவற்றைக் கண் காட்சிப் படுத்தியுள்ளீர்களா?

**பதில் :** ஆம் ! சேகரித்து வைத்துள்ளேன். சேகரிப்பை ஆரம்பிப்பதற்கு எனக்கு உந்துகோலாய் இருந்தது ஒரு சம்பவம். நான் சிறுவனாய் இருந்தபோது எங்களது அயல் வீட்டில் ஓவியம் வரையக்கூடிய ஓர் ஆசிரியரின் தாய் இருந்தார். அவரின் வீட்டில் அடுக்குப் பானைகள் இருந்தன. அடிப்பானையில் அவரது ஒன்பதாவது ஓவியச் சேகரிப்புப் புத்தகம் இருந்தது. அதைப் பார்த்ததும் எனக்கும் ஓவி யங்கள் சேகரிக்கவேண்டும் என்ற ஆசையுண் டானது. இதுவரை ஓவியர் என்ற வகையில் சுமார் எட்டுக் கண்காட்சிகளில் பங்கு பற்றியுள்ளேன். கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் அக்கண்காட்சிகள் இடம் பெற்றன. அதில் ஒன்று வடக்கு - கிழக்கு மாகாண சபையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்தப்பட்டது. அது பற்றி அவர்களால் வெளியிடப்பட்ட 'தூரிகை' என்னும் வர்ண நூலில் என்னைப் பற்றிய விபரங்கள் படத்துடன் வந்துள்ளன. இரண்டு கண்காட்சிகள் முற்றிலும் எனது படைப்புக்களை மட்டுமே கொண்டிருந்தன. க.பொ.த. (உ/த) படிக்கும் போதே எனது ஆக்கங்களைக் கொண்ட முதலாவது கண்காடசி 160 படைப்புக்களுடன் நடைபெற்றது. இது மட் / புனித மிக்கேல் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது. இதுதான் என்னை ஓவியனாக அனை வருக்கும் இனம் காட்டியது. கடைசியாக நடைபெற்ற கண் காட்சியும் அதே கல்லூரி மண்டபத்தில் செப்டம்பர் மாதம் நடைபெற்றது. எப்போதும் நான் எனது புனித, மிக்கேல் கல்லூரிக்குக் கடமைப்பட்டுள்ளேன்.

**வினா: உங்களைக் கவர்ந்த ஓவியர்கள் என்று யாரைக் குறிப்பிடுவீர்கள்?**

பதில்: வின்சன் வான்கோ, பப்ளோ பிக்காசோ, சல்வர் டோலாலி, ஜக்சன் பொலக், எம். எப். கூசைன் போன்ற பல பேர்களைக் குறிப்பிடலாம். இலங்கையைப் பொறுத்தவரையில் சமகாலத்தவரான சந்திர குப்த தேநுவர என்னைக் கவர்ந்தவர்.

**வினா: ஜக்சன் பொலக், கன்டின் கீ போன்ற ஓவியர்களின் 'அப்ஸ்ரக்' ஓவியங்கள் அனைவராலும் விளங்கிக் கொள்ள கடினமாயிருப்பதாகக் கூறப்படுகிறதே .......?**

பதில் : இவர்களின் ஓவியங்கள் வெறும் வர்ணக் கலவைகளை அள்ளி எறிந்ததுபோல் காணப்படும். உருவங்கள் அற்ற வர்ணச் சிதைவுகள் வார்த்தைகள் அற்ற இசையைப் போல. சிலருக்குப் பாடலுடன் கூடிய இசை பிடிக்கும்: வேறு சிலருக்கு வார்த்தைகள் அற்ற வாத்திய இசை பிடிக்கும்: அதே போலத்தான் இதுவும்.

**வினா : அண்மையில் நடைபெற்ற ஓவியக் கண் காட்சியில் 'வெசாக் 2000' என்னும் தலைப்பில் உடுப்புக்கள், கிருசாந்திகள் எனத் தலைப்பிட்ட கரிக்கடைடைகள் என்பனவும் 'மதில்' எனும் தலைப்பில் மணல், பலகைகள், பெட்டிகள் என்பனவும் காணப்பட்டது. இவைகளும் ஓவியம் என்பதினுள் அடங்குகின்றனவா?**

பதில்: ஆம் எதைப்பார்த்து, எண்ணங்களில் பிரதிபலிப்பு ஏற்படுகின்றதோ அவைகள் எல்லாம் ஓவியங்கள் தாம். கோடுகள், வண்ணங்கள், அமைப்புக்கள் எவற்றில் உண்டோ அவை அனைத்தும் ஓவியங்களே. ஆனால் அவற்றில் ஓவியரின் கையொப்பம் இருந்தால் மட்டுமே இது பொருத்தமாகும்..

**வினா: நவீன ஓவியங்கள் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

பதில்: அவை எனக்குப் புதியன அல்ல. ஓவிய வாதங்கள் அதிகம் தோன்றியது கி..பி 20ம் நூற்றாண்டில்தான். ஆனால் நவீன ஓவியங்கள் என்ற பதங்கள் கி.பி 16ம் நூற்றாண்டிலேயே வித்திடப்பட்டு விட்டன. எமது மரபு ஓவியங்கள் தான் நவீன ஓவியங்களுக்கு அத்திவாரமிட்டன.

**வினா: இறுதியாக, ஓவியத் துறையில் வளர விரும்புவோருக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?**

பதில்:– நிறைய ஓவியங்களைப் பார்க்க வேண்டும்; மூத்த ஓவியர்களை மானசீகக் குருவாக கொள்ள வேண்டும்; சளைக்காமல் வரைய வேண்டும்; உள்ளத்தில் ஊற்றெடுக்கும் கருப்பொருளை அப்படியே வரைய வேண்டும். பெரும்பாலும் எல்லாம் வரையப்பட்ட பின்னும் அவற்றில் இருந்து உங்களைத் தேடவேண்டும். இறுதியாக நன்றி கூறி இவரின் சேகரிப்புக்களை சிலர் விலை கொடுத்து வாங்கியுள்ளார்கள் என்ற செய்தியால் மகிழ்வடைந்து, க.பொ.த ( சா. த) - (உ. -த) பரீட்சைகளில் சித்திரத்தில் அதி விசேட சித்தி பெற்றது போன்று மேலும் உயர் கல்வி வாய்ப்புப் பெற வாழ்த்துக் கூறி விடை பெற்றோம்.

## அதிக அமைச்சர்கள் அதிக செலவு

| நாடு | மக்கள் தொகை (கோடியில்) | அமைச்சர்களின் தொகை |
|---|---|---|
| இந்தியா | 100.00 | 37 |
| பாகிஸ்தான் | 15.0 | 12 |
| இந்தோனேஷியா | 22.00 | 16 |
| தாய்லாந்து | 66.0 | 17 |
| அமெரிக்கா | 28.0 | 14 |
| பிரித்தானியா | 6.05 | 20 |
| யப்பான் | 13.0 | 19 |
| இலங்கை | 1.9 | 44 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே போகின்றாய்?

உலகம் தன்னைத் தானே சுற்றுகிறது என்று விஞ்ஞானம் சொல்கிறது. ஆனால் அந்த உலகத்தை மட்டுமே மனிதன் சுற்றுகிறான் என்று வேதம் சொல்கிறது.

மனிதன் உலகைச் சுற்றுகிறான் என்றால் இந்த உலகத்தில் அவன் தேவைகள் பூர்த்தி அடைகின்றது. தனக்குத் தேவையான எல்லாவற்றையும் இந்த உலகம் மட்டுமே தர முடியும் என்ற பேரவா. ஆனால் வேதம் சொல்லுகிறது `இந்த உலகத்தின் போக்கின்படி ஒழுகாதீர்கள் மாறாக உங்கள் உள்ளங்கள் புதுப்பிக்கப் பட்டு மாற்றம் அடைவதாக' ( உரோ 12 : 2) ஆனால் நாங்களோ உலகை மட்டுமே பற்றிக் கொண்டு நிழல்களை நிஜங்கள் என்று நம்பிக் கொண்டு வாழ்கிறோம்.

இந்த உலகை நம்பி அதன் பின்னால் செல்கிறோமே. நாம் அனுபவித்தது என்ன? அமைதியா? இல்லை சந்தோஷமா? நிம்மதியா? எதுவுமே இல்லை. மாறாக நாம் பெற்றதெல்லாம் வேதனையும் கண்ணீரும் தான். ஏன் தெரியுமா? வேதம் சொல்கிறது `நீங்கள் உலகைச் சார்ந்தவர்கள் அல்ல. எனவே உலகு உங்களை வெறுக்கிறது' (யோவான் 15: 19) உங்களை மட்டுமா உலகு வெறுத்தது.? இல்லை! இயேசுவையே இந்த உலகு வெறுத்தது (யோவான் 15: 18).

இந்த உலகம் மட்டும் தான் மனித வாழ்க்கையல்ல. அதையும் தாண்டி ஒரு புது வாழ்வு உண்டு. அதை மறந்து நாம் அழிவுக்குரிய பாதைகளிலே பயணம் செய்கிறோம். இந்த உலகு உனக்கு என்ன செய்தது? உன் உறவுகள் உனக்கு என்ன செய்திருக்கின்றன? யாருமே உனக்கு எதுவும் செய்யவில்லை. ஆனால் இயேசு உனக்காக எல்லாம் செய்திருக்கிறார். தன் உயிரையும் கொடுத்திருக்கிறார்.

உலகம் தரும் இன்பங்களைக் கண்டு மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆடுகிறாய். ஆனால் துன்பம் வந்ததும். இந்தக் கடவுளுக்கு கண்ணில்லையா என்று படைத்தவன் மேல் பாரமேற்றுகிறாய்! அவன் பாசத்தைச் சோதிக்கிறாய்! நிம்மதியின்றி அமைதியின்றி ஆறுதல் கூற யாரும் இன்றி கடல் அலைகள் போல தத்தளித்துத் திரிகின்றாய். அப்போது நீ தேடி ஓடிய உலகம் உனக்கு அமைதி தந்தா? இல்லை ஆறுதல் தான் சொன்னதா? இல்லை! இல்லவே இல்லை! ஆனால் வேதம் சொல்கிறது `உலகில் துன்பமுண்டு துணிவுடன் இருங்கள் நான் உலகின் மீது வெற்றி கொண்டு விட்டேன்' (யோவான் 16:33) இவ்வாறு இயேசு உங்களுக்கு உறுதி தந்து திடப்படுத்துகிறார்.

ஆனால் நாம் தீயனவற்றையே தேடிச் செல்கிறோம். தங்கள் பிள்ளைகள் உலக சிற்றின்பங்களுக்கு அடிமையாகி விட்டார்களே என்று புலம்பும் பெற்றோர் நம்மில் எத்தனை பேர்? தினமும் வேலைக்கு செல்கிறோம் என்று குடித்துக் கொண்டு வந்து மனைவியைக் கொடுமை செய்கின்ற கணவர்கள் நம்மில் எத்தனை பேர்? தினம் தினம் அழுகையும் கவலையுமே எம் வாழ்க்கையாகிவிட்டது. ஏன் இந்த நிலை? நாம் இன்னும் உலகைச் சார்ந்தவர்களாகவே வாழ்கிறோம். இதற் காகத்தான் இயேசு அன்று கூறினாரோ `எனக்காக அழவேண்டாம் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்' (லூா 23: 28).

இந்த உலக வாழ்வில் கடலில் தத்தளிக்கும் காகிதக் கப்பலைப் போன்று பாவத்தில் நாமும் தத்தளிக்கிறோம். வழி தெரியாதவர்களாய். உலகோடு போராடி முட்டிமோதி சிதறி சின்னா பின்னமாகி அழிவுறுகிறோம். வேதம் சொல்லுகிறது `உங்கள் அழிவுக்கு நீங்களே பொறுப்பு நானல்ல' (தி.பணி 18: 6) எங்களின் வாழ்வுப்பாதை தவறாக அமைவதால்தான் நாம் அழிவுறுகின்றோம்.

எங்கள் பாதை இயேசுவின் பாதையாகி அதில் நாம் பயணம் செல்வோமானால் நாம் ஒளியின் மக்களாய் வாழ்வோம். இயேசுவின் சுவடுகளால் பயணம் செல்ல எம் அகக் கண்களைத் திறந்து இருண்ட உலகிற்குள்ளே ஒளியாய் வழியாய் வாழும் இயேசுவை அறிந்து கொள்வோம். அவரில் விசுவாசம் கொண்டு அவரைப் பற்றிப்பிடித்துக் கொள்வோம்.

அவர் அன்பில் இணைந்து வெற்றி நடைபோடுவோம். `வேதனையோ, நெருக்கடியோ இன்னலோ. பட்டினியோ, இடரோ' எதுவுமே நம்மை அவரிடம் இருந்து பிரிக்க முடியாது என்று (உரோ 8:35) வேதம் சொல்கிறது. உலகத்தை நேசிக்கிறவனுக்கு இவைகள் தான் கிடைக்கும் ஆனால் இந்தச் சுமைகளை சுகமாக ஏற்றுக் கொண்டு உங்களோடு கூட நடந்துவர யேசு தயாராக இருக்கிறார் நீங்கள் தயாரா? கிறிஸ்துவில் பிரியமானவர்களே! நாம் உதட்டினால் இயேசுவைப் புகழ்கிறோம்! எம் உள்ளமோ வெகுதொலைவில் உள்ளது. நீ இப்போது பயணம் போகும் இடத்தில் நில்! கவனி! நீ செல்லும் பாதை சரியான பாதையா என்று சிந்தித்துப்பார். உலகைச் சார்ந்தவற்றில் விழுந்து கிடக்கும் எம்மைப் பார்த்து இயேசு கூறுகிறார். `உலக முடிவு வரை நான் உங்களோடு இருக்கிறேன்' (மத் 28 : 20) விழுந்து கிடக்கும் கிறிஸ்தவர்களே! எழுந்து உங்கள் பயணத்தைத் தொடருங்கள்! வாழ்வு தரக் காத்திருக்கும் இறைமகனைத் தேடுங்கள்! எல்லாம் நிறைவாய்க் கிடைக்கும்; புதுவாழ்வும் பிறக்கும்.

R. மதி
கல்லாறு - 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

-ஆழியோன்-

## 'எதிர்மன்னசிங்கனின் வாழ்வும் இலக்கியமும்'

'எதிர்மன்னசிங்கனின் வாழ்வும் இலக்கியமும்' என்னும் நூல் பார்வைக்குக் கிடைத்தது. உண்மையிலேயே இதுவோர் பிரயோசனம் மிக்க பதிப்பாகக் காணப்பட்டது. குறிப்பாக மாணவ சமுதாயத்திற்கும் கிழக்கு மாநில மண்ணைப்பற்றி அறிய ஆவலாய் இருப்போருக்கும் இவ்விலக்கியம் அரும்பொக்கிஷம்.

ஓ. கே. குணநாதன் அவர்களைத் தொகுப்பாசிரியராகக் கொண்டு எதிர்மன்னசிங்கம் அவர்களின் மணிவிழா வெளியீடாக 'எதிர்மன்னசிங்கனின் வாழ்வும் இலக்கியமும்' வெளிவந்துள்ளது

இப்புத்தகம் இரண்டு பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது. முதலாம் பிரிவு - எதிர்மன்னசிங்கனின் வாழ்வு : இரண்டாம் பிரிவு - எதிர்மன்னசிங்கனின் இலக்கியம்,

முதலாம் பிரிவில் எதிர்மன்னசிங்கனின் வாழ்வைப்பற்றி பலரும் கட்டுரை, கவிதை வடிவில் எழுதியிருக்க, இரண்டாம் பிரிவில் எதிர்மன்னசிங்கன் அவர்களின் ஆக்கங்கள் காணப்படுகின்றன. இந்த ஏற்பாடு மிகவும் சிறப்பானதுதான். எதிர்மன்னசிங்கன் அவர்களைப்பற்றியும் அவரின் ஆக்கங்கள் பற்றியும் ஒரே புத்தகத்தில் அறியக்கிடக்கின்றது.

### எதிர்மன்னசிங்கனின் வாழ்வு

ஆசியுரையை சுவாமி ஜீவானந்தாஜீ மகராஜ் எழுதியிருக்க, பதிப்பும் தொகுப்பும் என்னும் தலைப்பில் ஓ.கே குணநாதன் அவர்கள் தனது பதிப்புரையை எழுதியுள்ளார்கள். இதில் தங்களுக்குத் தாங்களே பட்டம் கொடுக்கும் இலக்கிய அன்பர்களைப் பற்றியும் குணநாதன் சுட்டிக்காட்டி இதில் எதிர்மன்னசிங்கம் விதிவிலக்கு என்றவாறு பெருமைப்பட்டுக் கொண்டுள்ளார். 'பதவிப்பொருத்தம்' என்னும் தலைப்பில் க. மகேஸ்வரலிங்கம் எழுதிய கட்டுரையில் எதிர்மன்னசிங்கத்தால் வடக்கு கிழக்கு மாகாண கலாசார உத்தியோகத்திற்கு மதிப்பு என்றவாறு குறிப்பிட்டுள்ளார். அவரின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளார்.



'கலை இலக்கியக்காரனின் வலதுகரம்' 'மணி விழா நாயகன் பற்றிய மனப்பதிவுகளிலிருந்து ...' என்பனவற்றை முறையே முல்லைமணி வே. சுப்பிரமணியம், தமிழ்மணி அகளங்கன் என்போர் வடித்துள்ளனர்

கலை எதிர்மன்னசிங்கம் ! (தாமரைத்தீவான்) நடுநிலை தவறா மன்னன் (நடேசன் சிவசண்முகமூர்த்தி) கலாசார சீலர் (கவிவேழம் பாரதிபாலன் - டென்மார்க்), தீந்தமிழ் அனையவன் (மருதூர்க் கொத்தன்), வாழிய நூறாண்டு (வெல்லவூர்க் கோபால்) ஆகிய கவிதைகள் முதலாம் பிரிவில் அடங்குகின்றன.

இவையெல்லாம் எதிர்மன்னசிங்கனின் வாழ்வையும், புகழையும் பாடுகின்றன.

### எதிர்மன்னசிங்கனின் இலக்கியம்

இப்பகுதி முழுக்க முழுக்க எதிர்மன்னசிங்கன் அவர்களின் படைப்புகளின் தொகுப்பாகக் காணப்படுகின்றது. கிழக்கிலங்கை வரலாற்றுப் புகழ்மிகு திருத்தலங்கள், சடங்குகள், அருங்கலைகளின் சிறப்பும் பண்பாட்டுப் பாரம்பரியமும், சுவாமி விபுலானந்தரின் கல்விக்கொள்கைகள், பாரதியின் காதற்சுவை மிகு கவிதை, தமிழர் கலை இலக்கியங்களில் இசையின் பங்கு, தமிழ்க் கலாசார மாற்றங்களும் அழிவுகளும், மட்டக்களப்புக் கூத்துமரபிற்குப் புத்துயிர் ஊட்டிய வித்தகர், இலக்கிய சுவைததும்பும் ஏடறியாப் பாடல்கள், சைவத்தின் தொன்மையும் பெருமையும் போன்ற கட்டுரைகள் காணப்படுகின்றன.

மட்டக்களப்பு மண்ணின் கலை, கலாசார பண்பாட்டுப் பாரம்பரியங்களையும், விழுமியங்களையும் வெளிக்காட்டும் ஊடகங்களாக இக்கட்டுரைகள் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சடங்குகள்' என்ற ஆக்கத்தில் மட்டக்களப்புத் கிராமிய மக்களின் பிறப்புத்தொடக்கம் இறப்பு வரை காணப்படும் மங்கல, அமங்கல நிகழ்வுகளின் சடங்குகள்' பற்றிச்சுவைததும்ப எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. சடங்குகள் வழக்கொழிந்துவரும் இக்காலகட்டத்தில் இக்கட்டுரையானது ஒரு வரலாற்று ஆவணம் ஆகும்.

நாட்டுக்கூத்து, கொம்புமுறி விளையாட்டு, வசந்தன் ஆடல், குரவை, மகுடிக்கூத்து, பறைமேளக் கூத்து என்பனவற்றைப்பற்றி 'அரும்கலைகளின் சிறப்பும் பண்பாட்டுப்பாரம்பரியமும்' என்ற கட்டுரை தெளிவாக விளக்கியுள்ளது. வடமோடி - தென்மோடி என்பனவற்றிற்கான வேறுபாடுகள் வியப்பைத்தரு கின்றன. அண்ணாவியார், மத்தள அண்ணாவியார், ஆட்டம் என்பன கூத்துக்கலையின் பெருமையை மலை யளவு உயர்த்திவிட்டன.

தமிழர் கலையில் இசையின் பங்கு பற்றி விளக்கிய எதிர்மன்னசிங்கன் தமிழ்க் கலாசார மாற்றங்கள் அடைந்துவரும் அழிவுகள் பற்றி கவலைப்படுகின்றார். தினை, வரகு, சோளன், குரக்கன் உணவுகள் மறைந்து கோதுமைமா, பட்டர், நூடில்ஸ் போன்ற உணவுகளின் ஆதிக்கம்பற்றி வேதனைப்பட்டிருக்கின்றார்.

பாரதியார் பாடல்கள் பற்றியும், சுவாமி விபு லானந்தரைப் பற்றியும் இவர் கூறியிருந்தாலும் பேரா சிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் மட்டக்களப்பு கலைகளின் ஆராய்ச்சிகளுக்கும் வளர்ச்சிக்கும் துணை போனதைக் கட்டுரையாளர் பெரு மனதுடன் எடுத்தியம் புகின்றார்.

கிழக்கு மாகாணத் திருத்தலங்கள் பற்றி இவர் எடுத்துக் கூறியுள்ளதுடன் சைவத்தின் தொன்மை பற்றியும் விளக்கமுயன்றுள்ளமை இவரது சமயப் பற்றையும் எடுத்துக்காட்டுகின்றது.

பொதுவாகக் கூறின் எதிர் மன்னசிங்கனின் வாழ்வும் இலக்கியமும் ஒரு வரவேற்கப்படவேண்டிய முயற்சி. கலைஞனை வாழும்போதே வாழ்த்த வேண்டும் என்ற எண்ணமொன்று நிறை வேறியுள்ளது.

# அர்ப்பண வாழ்வில்



புனித ஆசிர்வாதப்பர் கன்னியர் சபையைச் சேர்ந்த *அருட்சகோதரி ராணி ஞானப்பிரகாசம்* அவர்கள் 4.-10- 2003இல் தனது துறவறவாழ்வின் இறுதி வார்த்தைப்பாட்டை மொறட்டுவ மெல்வெலி கன்னியர் மடத்தில் பெற்றார்.

இருதயபுரப்பங்கில் தன்னை இறைவனுக்கு அர்ப்பணித்த இவர் பெரிய ஊறணியில் வசிக்கும் திரு. திருமதி ஞானப்பிரகாசம் தம்பதிகளின் மூன்றாவது புதல்வி ஆவார். இச்சகோதரி தனது ஆரம்பக் கல்வியை மட்/கருவேப்பன்கேணி விபுலானந்த வித்தியாலயத்திலும் தனது துறவறத்திற்கான படிப்பை இலண்டனிலும் கற்றார். 1993ம் ஆண்டு நவசந்நியாச வாழ்வை ஆரம்பித்த சகோதரி தனது முதல் வார்த்தைப்பாட்டை 14. 4. 1998ல் இலண்டனில் பெற்றார்.

அருட் சகோதரி ராணி ஞானப்பிரகாசம் அவர்கள் தனது அர்ப்பண வாழ்வில் அர்ச்சனை மலராகத் திகழ்ந்து பணிவாழ்வில் நறுமணம் வீசிட வாழ்த்துகிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருமாறும் தமிழ்

சங்க காலம் முதல் தமிழில் வேற்று மொழிச் சொற்கள் கலக்க ஆரம்பித்து விட்டன. அப்போது ஒன்று இரண்டாக இருந்த இக் கலப்பு காலப் போக்கில் அதிகரித்து மணிப்பிரவாள நடை தோன்று மளவுக்குச் சென்று விட்டது. ஐரோப்பியர் காலத்தோடு தமிழில் ஐரோப்பிய மொழிச் சொற்களும் அதிகளவில் கலக்கத் தொடங்கிற்று. அவற்றிலும் ஆங்கில மொழிச் சொற்கள் மிக அதிகமாகவே கலந்துள்ளன. தற்போது ஆங்கில மொழி பெற்றுள்ள உலகளாவிய செல்வாக்குக் காரணமாகவும். உலக மய மாக்கல் போன்ற பொருளாதார நெருக்கு வாரங்கள் காரணமாகவும் ஆங்கிலமே சிறந்த மொழி, ஆங்கிலம் அறியாமல் உலகில் எவருமே வாழ முடியாது, ஆங்கிலம் பேசுவதே கௌரவம் என்கின்ற ஒரு தோற்றப்பாடு உருவாகியுள்ளது. தமிழர் பேசும் தமிழ் மொழியில் ஆங்கிலச் சொற்களுக்கிடையே தமிழ்ச் சொற்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக தமிழ் நாட்டுக் கலாசாரம், அங்கிருந்து ஏற்றுமதியாகும் சஞ்சிகைகள், திரைப்படங்கள், பாடல்கள் தமிழ் மொழியை, அதன் தனித்துவத்தை அழிக்கும் இக்கைங்கரியத்தை திறமையாகச் செய்து வருகின்றன. ஒரு மொழியில் பிறமொழிச் சொற்கள் கலப்பது இயல்பானது என்றும் இது மொழியின் வளர்ச்சிக்குத் துணை செய்யும் என்றும் கூறுவாருண்டு. இதனை ஓரளவுக்கு ஏற்றுக் கொண்டாலும் ஒரு மொழியில் வலிந்து பிற மொழிச் சொற்களைத் திணிப்பதும் அதன் வடிவைச் சிதைப்பதும் மொழியின் வளர்ச்சிக்குத் துணை செய்ய மாட்டா. மாறாக அம்மொழியை இழிவுபடுத்தி அழிப்பதாகவே முடியும். மிகப்பழமை வாய்ந்ததும், இலக்கிய வளம் மிக்கதுமான தமிழ் மொழிக்கு இக்கதி நேரலாமா?

கடந்த செப்டம்பர் மாதம் முதலாம் திகதி அறிஞர் தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் 23வது நினைவுதினம் அனுட்டிக்கப்பட்டது. அடிகளார் எழுதிய கட்டுரைகள், நிகழ்த்திய உரைகளின் தொகுப்பாக 1959ம் ஆண்டு இரண்டாம் பதிப்புப் பெற்ற 'தமிழ்த் தூது' என்னும் நூலில் இடம் பெற்றுள்ள செந்தமிழ் வளர்ச்சி' என்னும் கட்டுரையில் தமிழ்மொழியில் பிற மொழிக் கலப்புப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அக் கட்டுரையிலிருந்து ஒரு பகுதியை அடிகளாரின் நினைவாக இங்கே தருகின்றோம்.

இருபது ஆண்டுகட்கு முன்னர்ச் செந்தமிழ் என்பது அருகிய பண்டமாய் வழங்கியது. மறைமலை அடிகள், திரு. வி. கலியாணசுந்தரர் முதலான ஒரு சில நூலாசிரியர் தவிர, ஏனையோர் பலர் பிற மொழிக் கலப்பினை விரும்பி, அக்கலப்பு நடையே தமிழ் நடையைச் சிறப்பித்துள்ள தெனக் கருதி வந்தனர். இன்று தமிழை நன்கு பயின்ற எழுத்தாளர் தமிழ் மகளின் கற்பைக் காப்பாற்றி வருகின்றனர். ஒரு சிலர் மட்டுமே, தமிழ் தனித்து இயங்கவல்லதாகுமோ, பிறமொழிக் கலப்பினால் அது வளம் பெறாதோ என ஐயுற்று, தமிழ் நடையில் வட சொற்களையும் திசைச் சொற்களையும் பெய்து வருகின்றனர். தமிழ் என்னும் பெயர்தானும், அது தனித்து இயங்க வல்லது எனக் குறிப்பதை அறியார்.

இச் செந்தமிழ் இயக்கத்திற்கு, தமிழ் நாடு என்னும் உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட அரசியல் இயக்கங்களும் காரணமாயின. நம் பல் கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும், பண்டைத் தமிழ் இலக்கியங்களைப் பயிலுமாறு நிறுவியதும் காரணமென்று எண்ணுதற்கு இடமுண்டு. இவ் விலக்கியங்களைப் படிப்போர், தமிழில் கூற முடியாத பொருள் ஒன்றும் இல்லை என்றும் எழுதும் பொருளை எவ்வாறு எழுத வேண்டும் என்றும் அறிவர். இவ் விலக்கியங்களைப் பயிலாதார் செந்தமிழைப் பெரும் பாலும் சீரழித்து வருகின்றனர். தமிழ் நடை வளம்பெற வேண்டுமாயின், தமிழ் எழுத்தாளர் தமிழ் இலக்கியங்களில் போதிய அறிவு படைத்தவர் ஆதல் வேண்டும். இற்றை ஆங்கில இலக்கியத்தில் மேல்வரிச் சட்டமாக விளங்கும் எழுத்தாளர் அனைவரும், பல் கலைக் கழகங்களில் கல்வி பயின்ற புலவரே என்பது குறிக்கற்பாலது. அங்ஙனமே, தமிழகத்தின் பல்கலைக் கழகங்களில் முறையே பாடங் கேட்டவர், செந்தமிழின் செஞ்சுவை நாட்டில் விஞ்சுமாறு உணர்த்தி வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டை இலக்கியங்களில் தோய்ந்த அறிவு பெறின், அவ்வறிவு புதுமை இலக்கியம் படைத்தற்கு இடையூறாக நிற்கும் என்பது தவறு. சிலப்பதிகாரம் பயின்றால், புதிய இலக்கியம் இனிமை குறைந்து போகுமா? கம்பரைக் கற்பின், கற்பனையும் சொல் வளமும் குன்றி விடுமா? இத்தகைய நூல்கள் எக் காலத்திலும் படிப்போருக்குப் பயன் அளித்தல் பற்றியே, இவற்றை இலக்கிய நூல்கள் என்று அழைக்கின்றோம். ஆங்கில அறிவும் எழுத்தாண்மையும் படைத்தல் வேண்டுமெனின், பல்லாண்டுகட்கு முன் வாழ்ந்துள்ள சாசர் (Chaucer) என்னும் புலவரைப் படிக்க வேண்டும் என்பர். அதுபோலவே, புதுமை இலக்கியம் படைக்க வேண்டுமேல், பண்டைச் சங்க இலக்கியங்களில் போதிய அறிவினைப் படைத்தல் வேண்டும். எளிய நடைக்கும் அழகிய சொல் அமைதிக்கும். இவற்றையே அடிப்படையாகக் கோடல் உறுதுணை ஆகும்.

இன்று நமது நாட்டு செய்தித் தாள்களும், கிழமைத்தாள்களும், செந்தமிழ் வளர்ச்சிக்கு ஆதரவு அளிப்பனவாகத் தோன்றில. அவைதாமும் இவ் வியக்கத்தில் பங்குபெறுமெனின், இது முற்றிலும் வெற்றி பெறும் என்பதற்கு ஐயமின்று.

செந்தமிழ் இயக்கத்திற்கு வேறொரு தடையுமுளது. அமெரிக்க நண்பர் ஒருவருடன் தென்னிந்தியாவில் புகை வண்டியில் சென்று கொண்டிருந்தேன். அவ்வண்டியில், எமக்கு அருகில், தமிழர் சிலர் அமர்ந்திருந்தார். தமிழில் - ஆங்கிலத் தமிழில் எனக் கூறின், இதனினும் மிகப் பொருத்தமாகும் - ஆங்கிலத் தமிழில் உரையாடலாயினோம். அதனைச் செவியுற்ற என் நண்பர் என்னை நோக்கி, 'தமிழ் தனித்து இயங்கும் மொழி என்றும். சொல்வளம் பெருகிய மொழி என்றும் நீங்கள் சொல்வீர்கள். ஆயின், தமிழ் உரையாடலில் இத்தகைய ஆங்கிலச் சொற்களையும் தொடர்களையும் சேர்க்க வேண்டு மெனின், அது எங்ஙனம் தனித்து இயங்கும் மொழியாகும்? ' என்றார்.

யாழ்ப்பாணத்தில் தமிழ் விழா நிகழ்ந்த பொழுது, இக் கலப்பு வழக்கைக் கண்டித்துச் சில கட்டுரைகள் எழுந்தன. இக் கலப்பு வழக்கிற்குக் காரணம் மடிமையே, தமிழிற் சொல்ல முடியாத பொருள் ஒன்றுமில்லை யென்ற பின், தமிழ் உரையாடலில், ஆசிரியரும் புலவரும் உள்ளிட்டோர் தாமும், 'இந்த Poem -ஐ translate செய்ய வேண்டும்' Cholas History இல்வரும் Many Ministers Kings உடைய Relations ஆகவே இருந்தார்கள்' என்ற பான்மையில் தமிழைக் கையாளும் பொழுது, தமிழ் வளர்ச்சி விரும்பும் சிலர்க்கு வெறுப்புண்டாதலில் வியப் பொன்றும் இல்லை. இத்தாலியத்தை இனிதுணர்ந்த ஆங்கிலேயர், தமக்குள்ளே பேசும் பொழுது, இத்தாலியத்தை ஆங்கிலத்துடன் கலந்தா பேசுகின்றனர்? ஆங்கிலம் நன்குணர்ந்த ஜப்பானியர் உரையாடுமிடத்து, ஆங்கிலத்தை ஜப்பான் மொழியுடன் கலந்தா உரையாடுகின்றனர்? தமிழிற்குத் தானோ இந்தச் சீரழிவு? தமிழ் நாட்டில் இச் சீர்கேடு மல்கியுள்ளதால். நாம் அதனை உணராதிருக்கின்றோம். பிற நாடுகளிலிருந்து நம் நாட்டிற்கு வருபவர் அதை நன்கு குறிக்கின்றனர். நம் எண்ணங்களைத் தமிழில் வெளிப்படுத்தும் பொழுது பிற மொழிக் கலப்பின்றி வெளிப்படுத்த முயல்வோமாகில். நம் மொழி வளம் பெறுதற்கும், நம் இலக்கியம் உயர்வடைதற்கும் வழி காட்டுவோம்.

தமிழ் மொழியிற் கூற முடியாத கருத்துக்கள் எவையும் இல்லை. பிற மொழிகளுடன் தொடர்பற்ற காலத்தில், தமிழர் தம் அரிய கருத்துக்களை எங்ஙனம் கூறினார்? அவர் மிக்க நுண்மையும் ஒண்மையும் வண்மையும் ஆகிய எண்ணங்களைப் பற்றி நூல்கள் யாத்துள்ளனர் அன்றோ? பண்டை இலக்கியத்தையும், உரையாசிரியர் நூல்களையும் படிக்கும் பொழுது, இற்றை நாட் கருத்துக்களைக் கையாளுதற்குரிய சொற்களை அந்நூலிகளிலேயே காண்கின்றோம். ஒரு முறை 'Irrigation' எனும் ஆங்கிலச்சொல்லிற்குச் செமமையான தமிழ்ச் சொல் தேடினேன். திருக்குறளைப் புரட்டிப் பார்த்தேன். பரிமேலழகர் உரையில், 'நீர் கால் யாத்தல்' எனும் சொற்றொடரைக் கண்டு மிகவும் வியந்தேன். ஏனெனின் யான் தேடிய கருத்து ஆங்கு மிகவும் அழகுறக் காட்டப் பெற்றிருந்தது. இங்ஙனம் எத்துணை அருமையான சொற்கள் பிற மொழிக் கலப்பினால் வழக் கொழிந்து போயின? ஞாயிற்றுக் கிழமை எனக் கூறும் தமிழ் மக்களுள் எத்துணைப் பெயர், ஞாயிறு, கிழமை எனும் அத்தனிச் சொற்களைத் தம் உரையாடலில் பயன் படுத்துகின்றனர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் பக்கம்



க.பொ.த (சாதாரணம்)
– கத்தோலிக்க திருமறை –
❖ மெற்றில்டா

(23ம் பாடம்)

## உலகக் கலாசாரத்தில் இலங்கையின் வாழ்க்கை நிலை

## மறுவாழ்வு மூலம் உலகக் கலாசாரத்துடன் இணைந்த கிறிஸ்து

❖ மறுவாழ்வுக்கான பிரதான சான்று கிறிஸ்துவின் உயிர்ப்பாகும். இதனைத் தூயபவுல் கொரிந்தியருக்கெழுதிய திருமுகத்தில் விளக்குகிறார். 1கொரிந்தியர் 15: 35 -54

❖ துன்பத்திற்கும், அநித்தியத்திற்கும் அப்பாற்பட்ட நித்திய வாழ்வொன்று உண்டென கிறிஸ்து உயிர்ப்பு மூலம் காட்டினார். இதனால் மனுக்குலத்திற்கு புது உதயம் உருவானது.

❖ நற்செய்தியில் கிறிஸ்து தமது பாடுகள் மரணத்தை வெளிப்படுத்தும் போது உயிர்ப்பையும் சேர்த்தே வெளிப்படுத்தினார்.

❖ மனிதன் இறைவாழ்வுக்கு அழைக்கப்பட்டுள்ளான். அதன் அடிப்படை உயிர்த்த கிறிஸ்துவே. உரோமையர் 10: 9

❖ உயிர்த்த கிறிஸ்துவுடன் ஒன்றித்து நாமும் புதுவாழ்வினுள் நுழைகின்றோம் என்பது கிறிஸ்தவ மறையின் அடிப்படைப் போதனையாகும்.

❖ உலகக் கலாசாரத்தினுள் கிறிஸ்து உயிர் உள்ளவராகவும், ஆரம்பமும், மையமும், இறுதியும், நிறைவுமாயுள்ளார்.

### உயிர்ப்பைப்பற்றிக் கிறிஸ்துவின் சீடர்களின் பதில்

❖ மத்தேயு 28: 11 -15

❖ உயிர்த்த இயேசு காட்சி கொடுத்ததால், அப்போஸ்தலர்களின் விசுவாசம் உறுதிப்படுத்தப்பட்டு, நம்பிக்கையை இழக்க காரணமாயிருந்த கல்லறை, பெந்தே கொஸ்தே விழாவின் பின் அவர்களை விசுவாசத்தில் உறுதிப்படுத்தியது.

❖ அதை அடிப்படையாக வைத்து அப்போஸ்தலர்கள் பரிசுத்த திருச்சபையை தம் தியாகத்தால் கட்டி எழுப்பினர்.

❖ அவர்களின் படிப்பினைகளின் கருப்பொருள் கிறிஸ்துவின் உயிர்ப்பே.

❖ உலக கலாசார முதற்படியாகத் திருச்சபை நிறுவப்பட்டது

❖ மரணம் எமது வாழ்வின் முடிவல்ல. மனித உயிரைக் காப்பதுடன், மனித வாழ்வின் தேவை அனைத்திலும் அக்கறை கொள்வதால் மறு வாழ்வு நிறைவடைகிறது என்பது தெளிவாகிறது.

### ஆதித் திருச்சபையில் கிறிஸ்துவின் சீடர்களிடம் காணப்பட்ட பண்புகள்

1) கிறிஸ்துவின் மரணத்தை நினைவுபடுத்தி அப்பம் பிட்குதல் மூலம் ஒற்றுமையை வெளிப்படுத்தினர்.
2) செபம் மூலம் ஆன்மீக வளர்ச்சியைத் தேடினர்.
3) புதிய பொருளாதாரத் திட்டம் மூலம், சொத்துக்களைப் பொதுவாக வைத்தனர்.
4) உயிர்த்த கிறிஸ்து பெயரால் நோயாளிகளைக் குணமாக்கினர்.
5) கிறிஸ்து உயிர்த்த தினமான ஞாயிறைப் பரிசுத்தமாகக் காத்து ஓய்வு பெற்றனர்

❖ தூய பவுல் மனமாற்றம் பெறக்காரணம் கிறிஸ்துவின் உயிர்ப்பே. தூயபவுல் உயிர்த்த கிறிஸ்துவோடு ஒன்றித்துப் போதித்தார்.

❖ நாமும் இயேசுவின் உயிர்ப்புக்குச் சான்று பகர வேண்டும். எனவே, பத்துக் கற்பனைகளை அனுசரித்து மலைப்பொழிவில் வரும் கிறிஸ்தவப் பண்புகளைக்காக்க வேண்டும்.

❖ யோவான் 11: 25



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ ஒற்றுமை மூலம் அமைதியுருவாகும்

❖ லூக்கா 6: 31

## அமைதியை ஏற்படுத்த

1) இனவாதத்திற்குக் கைகொடுக்கக்கூடாது.
2) பொது வாழ்வு நலம் பெறச் சேவையாற்றுகையில் குழுவாதத்தை நீக்கி, ஏனைய மதத்தவரது உதவியும் பெறுதல்.
உ+ம் சிரமதானம், இரக்கப்பணிகள்
3) சமுதாய, தனிப்பட்ட தேவைகளையறிந்து செயற்படல்.
4) ஏனைய மத போதனைகள், வழிபாட்டு முறைகள் போன்றவை பற்றிய போதிய அனுபவத்தைப் பெறுதல், மதித்தல்.
5) நீதி, அமைதி, சுதந்திரம், நன்னடத்தை, அனைத்து மதங்கட்கும் பொதுவானவை என அறிந்து மதித்தல்.
6) பல்வேறுபட்ட மத விழாக்களில் தேவையான உதவிகள் புரிதல்.
7) அயலவரின் இன்ப, துன்பங்களில் பங்கெடுத்தல்
8) சமாதான முயற்சிகளிலீடுபடுதல்.
9) இன, மத பேதமின்றி ஒற்றுமையுடன் செயற்படுதல்.

### அகில உலகச் சமூக உறவைக் கட்டி யெழுப்ப நமக்குள்ள பொறுப்பு

❖ முழு உலகச் சகோதரத்துவமே மானிட உறவின டிப்படை

❖ கிறிஸ்தவர் உலக சமாதானத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

❖ உலகமுடிவில் இறையரசு பூரணமடையும்.

❖ இறையரசு நற்செய்தியில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

❖ இவ்வுலகில் பரந்துள்ள இறையரசுக்காகத் தம் வாழ்வாலும் செயலாலும், சொல்லாலும் சான்று பகர்வது எம் கடமை.

❖ மத்தேயு 25:34

❖ இறைசாயலாகப் படைக்கப்பட்ட மனிதன், கிறிஸ்துவின் மரணத்தால் விடுதலையடைந்து அதனை மற்றவர்க்கும் பகிர்ந்து கொடுக்கும் பொறுப்பை யேற்றுள்ளான்.

❖ பரிசுத்த திருச்சபையில் எவ்வித பேதங்களுமில்லை.

❖ இன்று பொது நன்மைக்காக அகில உலக நிறுவனங்களும் தொழில்சார் நிறுவனங்களும் இணைந்து பணியாற்றுகின்றன.

❖ அவைக்குதவுவது எம் கடமையாகும்

பாடம் – 24

## இறையரசின் மூலம் நிறைவுபெறும் உலகக் கலாசாரம்

### ❖ இறையரசின் நிறைவும், விண்ணேற்பும்

❖ இயேசுவில் இறையரசு பூரணம் பெற்றதுபோல, அது முன்னோக்கிப் பரந்து செல்கிறது. கிறிஸ்துவின் உத்தானம் இதற்கு உதாரணமாகும்.

❖ இறைவன் தூய ஆவியாரைக் கொண்டு திருச்சபையை நடத்துகிறார்.

❖ கிறிஸ்துநாதரின் செயற்பாடு உயிர்ப்பு மூலம் நிறைவு பெற்றது. புதிய படைப்பு என்ற நிலைக்கு உயர்த்தப்பட்ட அவர் விண்ணேற்பு மூலம் மனிதத்துவத்தை மேலான ஒரு சந்தர்ப்பத்திற்கு உயர்த்தினார். திருத்தூதர் பணி 1: 8

### உலகில் எல்லையை மீறிச் செல்லும் உலகக் கலாசாரத்தின் பூரணத்துவம்

❖ உலகக் கலாசாரமென்பதன் பொருள், உயிர்த்தெழுந்தவர்களின் புதிய சமுதாயம் என்பதாகும். திருச்சபை உலக கலாசாரத்திற்கு முன்னடையாளம். ஆகையால் அவர் வழியாக உயிர்த்தவர்களின் புதிய சமுதாயம் அறிமுகமாகிறது.

❖ அதற்குச் சான்று பகர்வது எம் பொறுப்பு.

❖ இது இவ்வுலகிலில்லாவிட்டாலும், எதிர் காலத்தில் உருவாகலாம். திருவெளிப்பாடு 21: 1 - 5

❖ உலகத்தினதும், மனித இனத்தினதும் இறுதிக் காலம் பற்றியறிவோம்.

❖ பாவத்தால் உலகின் தன்மையழிந்துபோக தார்மீகம் நிலவும் புதிய வானமும், புதிய பூமியும் இறைவனால் ஏற்படுத்தப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ அதனால் மனிதரிடத்தில் சமாதான ஆசை நிறைவு படுத்தப்பட்டு, மரணம் தோற்கடிக்கப்பட்டு இறைமக்கள் கிறிஸ்துவுக்குள் எழுப்பப்படுவார்கள்.

❖ அன்பும், அருளும், அன்புச் செயல்களும் அழிந்து போகாமல் நிலவுவதோடு, மனிதனுக்காக நிர்மாணிக்கப்பட்ட முழுப்படைப்பும் பாவத்தினடிமைத் தனத்திலிருந்து விடுவிக்கப்படும் *எசாயா 25 - 7*

❖ படைப்பு முழுவதும் அழியாமல், அதன் தன்மை மாறுபடும் என எடுத்துக் காட்டப்படும் 'உருமாற்றமே' இப்பூரணத்துவம்.

❖ தீமைக் கெதிராகப் புதியதொரு உலகைப் படைக்க நாம் ஒத்துழைக்க வேண்டும்.

**பூரணத்துவம் பற்றிய முன்னறிவித்தல்**

❖ மண்ணுலகின் இறையரசு பரிசுத்த திருச்சபை

❖ பரிசுத்த கத்தோலிக்கத் திருச்சபையில் இல்லற, துறவற, குருத்துவநிலை மாற்றங்களையும் அறிகிறோம்: காண்கிறோம். இதுவே வரவிருக்கும் புதிய ஜெருசலேம்

**இறையரசின் விசேட தன்மைகள்.**

1. இறைகட்டளைக்குக் கீழ்ப்படிதல்
2. திருமணத்தைத் துறத்தல்
3. உலக செல்வங்களை வெறுத்தல்
4. செபித்தல்
5. இறையாராதனை செய்தல்
6. உலகியல் தேவைகளிராது

❖ கிறிஸ்தவ வாழ்வின் கடைசிநோக்கம் இறைவனோடு சேர்வது.

❖ இந்நோக்கத்தை நிறைவுசெய்து கொள்ள மனிதன் எடுக்கும் முயறிசிகளால் ஆன்மீகம் கட்டியெழுப்பப்படுகிறது.

❖ இதற்குத் தூய ஆவியாரின் கொடைகளும், செபம், தவம் அவசியம்.

❖ நீதி, நேர்மை, சகோதரத்துவம், இரக்கம் போன்ற விழுமியங்களை வளர்ப்பதால் இறையரசைப் பூரணமாக்கலாம்.

**நம் ஆண்டவர் நிறைவாழ்வுக்கு எமையழைக்கிறார்.**

❖ 2பேதுரு *3 : 13*

❖ 2ம் வத்திக்கான் பொதுச் சங்கப்படி மனித சமுதாயத்தை மிக நல்ல முறையில் உருவாக்க உலகியல் முன்னேற்றம் உதவும்,இது இறையரசுக்குதவும்.

❖ நாம் எமது ஆன்மாவை எதனாலும் இழந்துவிடக் கூடாது.

❖ புதிய வானம், புதிய பூமி பற்றிய உடன் படிக்கையின்படி இவ்வுலக செல்வங்களில் ஆசை இருக்கக் கூடாது.

❖ கிறிஸ்து கூறிய இலட்சிய வாழ்வைத் தூய ஆவியாரின் உதவியோடு நடத்தும் போது இறையரசை உருவாக்கலாம்.

## பாராட்டுகிறோம்

இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் நீதிக்கும் சமாதானத்திற்குமான ஆணைக்குழு நாடளாவிய ரீதியில் நடத்திய நாடகப் போட்டியில் மட்டக்களப்பில் தயாரிக்கப்பட்ட 'அவங்க பேசமாட்டாங்க' நாடகம் முதலிடத்தைப் பெற்றது.

சிறுவர் அபிவிருத்தியையும், மேம்பாட்டையும் பாதுகாப்பையும் கருப்பொருளாகக் கொண்டு நடைபெற்ற இப்போட்டிகள் யாழ் மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெற்றன.

அருட்தந்தை றொஹான் பேனாட்தயாரித்து நெறிப்படுத்திய இந்நாடகம் முதற்பரிசைப்பெற்றதோடு சிறந்த பின்னணி இசை, சிறந்த நடிகைக்கான பரிசு உட்பட மூன்று பரிசுகளைப் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது. நெறிப்படுத்திய அருட்தந்தைக்கும், பங்குகொண்ட இளைஞர்களுக்கும் தொண்டன் தனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானம் யாருக்கு?

இடைக்கால நிர்வாக சபை தொடர்பான சட்ட வரைபுகளை உருவாக்கவும், அதற்கு இறுதி வடிவம் கொடுக்கவும், புலிகளின் தலைவர்கள் உலக நாடுகள் பலவற்றுக்கும் பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள். இது அவர்கள் ஒரு சமாதானத் தீர்வில் உறுதியான பிடிப்புடன் ஈடுபட்டுள்ளதையே காட்டுகிறது. ஒரு காலத்தில் `தனி ஈழத்தைத் தவிர வேறு எதைக் கேட்டாலும் தருவோம்' என்று கூறிய தென்னிலங்கை அரசியல்வாதிகள் இடைக்கால நிர்வாகசபை யோசனைகளை எந்த விதத்திலும் புறந்தள்ளிவிட முடியாது. அதேவேளை இங்குள்ள சமாதானத்தை விரும்பாத, சண்டை ஒன்றின் மூலம் புலிகளை அழித்து, தமிழ் மண்ணை ஆக்கிரமிக்கத் முடிக்கும் தீய சக்திகள் ஊர்வலங்கள் நடத்தியும் கோஷங்கள் எழுப்பியும் கொட்டமடித்துக் கொண்டிருக்கின்றன. அரசாங்கமும் உறுதியானதும் தெளிவானதுமான முடிவுகளை எடுக்க முடியாத, எடுக்க விரும்பாத் மனநிலையில் தான் இருப்பது போல் தெரிகிறது. சமாதானம் பற்றிப் பேசுவதும், சண்டைக்கு ஆள்திரட்டுவதும், போராயுதங்களையும், போர்க் கப்பல்களையும் வாங்கிக் குவிப்பதும், வெளிநாட்டு இராணுவ ஆலோசகர்கள், இராணுவ அதிகாரிகள் போன்றோரை வரவழைத்து இராணுவத்தினருக்குப் பயிற்சியும் ஆலோசனைகளும் வழங்குவதுமாக உள்ளது.

இச் சூழ்நிலைகள் நிலையான சமாதானத்தை எதிர்பார்த்திருக்கும் சாதாரண மக்களுக்கு, அதிலும் குறிப்பாக போரால் அழிவுகளையும் துயரங்களையும், பிரிவுகளையும் சுமந்து அல்லல்படும் மக்களுக்கு ஏமாற்றம் தருவதாக உள்ளன. வெளிநாட்டு உதவி என்ற பெயரால் கோடிக் கணக்கில் கடனாக வழங்கப்படும் தொகையை நம்பி காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கும் அரசாங்கம், வடக்கு - கிழக்கிலுள்ள இராணுவ முகாம்களைப் பலப்படுத்துவதிலும், ஆயுதங்கள் வாங்குவதிலும் வெளிநாட்டுக் கம்பனிகளின் உள் நாட்டுத் தேவைகளை நிறைவு செய்வதற்கான வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலும் ஈடுபட்டிருப்பதாக அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இதற்கு ஏற்பவே அரசின் செயற்பாடுகள் உள்ளதாகக் கூறப்படுகிறது. வெளிநாட்டு நிறுவனங்களின் வியாபார வசதிகளுக்காக கிராமங்களை அழித்து அதிவேக பாதைகள் அமைத்தல், பெரிய ஹோட்டல்கள் ஆடம்பர சுற்றுலா விடுதிகள் அமைத்தல், தொலைபேசி, மின்சார இணைப்புக்களை மேம்படுத்தி தொழிற்சாலைகளை நவீனப்படுத்தி, தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் குறைத்தல், அரச துறைகளை மேலும் தனியார் மயப்படுத்தல் போன்ற வெளிநாட்டுக் கம்பனிகளின் வசதிக்கும், தேவைக்குமான விடயங்களில் அரசு அதிக அக்கறை காட்டி வருவதாகக் கூறப்படுகிறது. வெளிநாடுகளின் சமாதான ஈடுபாட்டையும் அக்கறையையும் இந்தப் பின்ணணியிலேயே நாம் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு சமாதானம் என்ற பெயரால் வெளிநாட்டு நிறுவனங்களின் ஆதிக்கமும் இராணுவப் பலப்படுத்தலும் நடைபெற்றுவருவது இந்த நாட்டுமக்களுக்கு நன்மை தரப்போவதில்லை. சமாதானம் தேவை. யாருக்கு? நாட்டு மக்களுக்கா அல்லது சமாதானப் போர்வையில் இந்நாட்டில் நுழைந்து எமது மக்களின் உழைப்பையும், செல்வத்தையும், கலாசார விழுமியங்களையும் கொள்ளையிடத்துடிக்கும் வெளிநாட்டு வியாபார நிறுவனங்களுக்கா? இதன் பிரதிபலிப்புகள் இப்போதே வெளிப்படத் தொடங்கிவிட்டன. காணிகள் இழந்தோர், வேலைகள் இழந்தோர் மற்றும் சம்பள உயர்வு கோரி இடம் பெற்றுவரும் போராட்டங்கள், சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டு ஒன்றரை ஆண்டுகளாகியும் தம் சொந்த இடங்களில் குடியேறும் உரிமை மறுக்கப்பட்ட மக்களின் போராட்டங்கள், விவசாய, கடல் தொழிலாளர்களின் தொழில் முயற்சிகளைப் பாதுகாப்பு என்ற பெயரால் கட்டுப்படுத்தும் அடக்கு முறைகளுக்கு எதிரான போராட்டங்கள், இவை எல்லாம் சமாதானம் பற்றிப் பேசுவோரின் முரண்பட்ட நடவடிக்கைகளின் எதிர்வெளிப்பாடாகவே தோன்றுகின்றன. சமாதானம் என்ற பெயரால் பலப்படுத்தப்பட்டுவரும் இராணுவ வல்லாண்மையையும், இலங்கையைச் சூழ விரிக்கப்பட்டு வரும் சர்வதேச வர்த்தக வலையையும் இனங்கண்டு கொண்டு இலங்கை மக்கள் தென்பகுதியினரும் சரி வட, கிழக்குப் பகுதியினரும் சரி ஒருவர் மற்றவரது உரிமைகளை அங்கீகரித்து, மதித்து ஒன்றுபட்டு செயற்படுவதன் மூலமே வெளிநாட்டுச் சுரண்டல் பூதங்களிலிருந்தும், இராணுவ வல்லாதிக்கத்திலிருந்தும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

**மலர்வேந்தன்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை குவாடலூப் திருநாள்

J.S.மரியதாஸ்,
திருகோணமலை.

திருகோணமலை புனித குவாடலூப்பின் வருடாந்த திருநாள் கடந்த செப்.28ந்திகதி வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. செப்.19ந்திகதி அன்னையின் திரு உருவம் பதித்த திருநாள் கொடி, ஆலய வளவில் ஏற்றி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஒன்பது நாட்கள் நோவினாக்கள் இடம்பெற்றன.



கிழக்கிழங்கையின் மிகவும் பிரசித்தம் பெற்றதும் இலங்கையின் நன்மதிப்பை பெற்றதுமான அன்னை குவாடலூப்பின் ஆலய பங்குத் தந்தையான அருட்பணி ஜோர்ஜ் திசாநாயக்கா விழாவுக்கான சகல நடவடிக்கைகளையும் மிகவும் சிறப்பாக மேற்கொண்டிருந்தார்.

செப்.27ந் திகதி காலை முதல் திவ்விய நற்கருணை வழங்கும் வைபவமும், உறுதிப்பூசுதல் வைபவமும் கிழக்கிலங்கையின் அதி. வணக்கத்திற்குரிய ஆண்டகை கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களால் மிகச் சிறப்பாக நடாத்திவைக்கப்பட்டது. பிற்பகல் அன்னையின் திருச்சுரூபப் பவனி திருகோணமலை பிரதான வீதிகள் ஊடாக இடம்பெற்றது.

செப். 28ந்திகதி விழாத்திருப்பலி ஆண்டகையின் தலைமையில் இடம்பெற்றதுடன் மிகச் சிறப்பாக வருடாந்த விழா இனிது முற்றுப்பெற்றது. இந்த வருடாந்த நிகழ்வின் முக்கிய அம்சம் என்னவெனில் பங்குத் தந்தையினால் அமெரிக்கா மெக்சிக்கோ நகரில் இருந்து கொண்டுவரப்பட்ட புனித குவாடலூப்பின் திருச்சுரூபத்தினால் சகல அடியார்களுக்கும் ஆசீர்வாதம் வழங்கப்பட்டமையே.

இந்த ஆலயம் சுமார் 40 வருடங்களுக்கு மேலான பழமையைக் கொண்டது. இந்த ஆலயம் திருகோணமலையில் நிறுவுவதற்கு ஏதுவாக இருந்தவர்கள் அன்றைய கிழக்கிலங்கையின் ஆயர் காலம் சென்ற அதிவண, இக்னேசியஸ் கிளெனியும், காலம் சென்ற சின்னக்கடை புனித குவாடலூப் ஆலயத்தின் பங்குத்தந்தை அருட்பணி ஜோண் பீற்றர் அடிகளாருமே.

இவர்கள் இருபேரையும் எளிதில் எவராலும் மறந்துவிட முடியாது. அன்றைய ஆயர் அமெரிக்க நாட்டு பிரஜை என்பதால் தனது நாட்டின் சின்னமாக இதை எமது நாட்டுக்கு வழங்கினார். அவரின் அன்புக் கட்டளையை ஏற்று ஜோண்பீற்றர் அடிகளார் அன்னை குவாடலூப்பிற்கு அலை கடல் அருகில் அழகான ஆலயமொன்றை அமைத்தார்.

ஆனால் நிறுவப்பட்ட குறுகிய காலத்தினுள் 1964ம் ஆண்டு திருகோணமலையில் வீசிய பயங்கர சூறாவளியினால் அன்னையின் ஆலயம் சுக்குநூறாக்கப்பட்டது. ஆனால் ஜோண் பீற்றர் அடிகளார் இயற்கையின் சீற்றத்திற்குச் சவால் விடுத்து மீண்டும் புதுப்பொலிவுடன் இந்த ஆலயத்தைக் குறுகிய காலத்தினுள் கட்டி முடித்தார்.

அன்னை குவாடலூப் அமெரிக்கா நாட்டின் மெக்சிக்கோ எனும் பகுதியில் யுவான் தியாக்கோ எனும் ஓர் ஏழை விவசாயிக்கே முதன் முதலில் தரிசனம் கொடுத்தார். தான் கண்ட அந்த அற்புதக் காட்சியை அவ்வூர் மேற்றானி ஆண்டகையிடமும், ஊர்வாசிகளிடமும் அவர் எடுத்துக் கூறியும் ஒருவரும் அதை நம்பவில்லை

ஆனால் அன்னை குவாடலூப் யுவான் தியாக்கோவுக்கு ஏற்பட்ட சங்கட நிலையை தனது தெய்வீகத் தன்மையால் உணர்ந்து அவருக்கு ஓர் அடையாளத்தை வழங்கி மேற்றானியாண்டகையிடம் அனுப்பிவைத்தார். அந்த அற்புத அடையாளத்தைக் கண்ணுற்ற மேற்றாணியாண்டகையும், அவ்வூர் வாசிகளும் அன்னையின் தரிசனத்தை நம்பியதுமல்லாமல் அன்னையின் வேண்டுகோளுக்கிணங்க தரிசனம் கொடுத்த இடத்திலே அன்னைக்கு அவ்வூர் மேற்றாணியாண்டகை பொதுமக்களின் ஒத்துழைப்புடன் அழகான ஆலயம் ஒன்றை அமைத்தார்.

இந்த ஆலயத்தை நேரடியாகச் சென்று பார்வையிட சின்னக்கடை குவாடலூப் அன்னையின் ஆலய பங்குத் தந்தை ஜோர்ஜ் திசாநாயக்கா அவாக்கொண்டு அதற்காக அன்னையிடம் விசேட பிரார்த்தனையை மேற்கொண்டார். அதன் பலனாக அண்மையில் அமெரிக்காவுக்குச் சென்று மெக்சிக்கோ பகுதியில் அன்னையின் ஆலயத்தைத் தரிசித்து வந்துள்ளார்.

அருட்பணி ஜோர்ஜ் திசாநாயக்கா இப்பங்கிற்கு 1994ம் ஆண்டு வருகை தந்தார். அவருடைய காலப்பகுதியில் மிக விசேட முன்னேற்றங்கள் சின்னக்கடைப்பங்கு அடைந்துள்ளதை எவரும் நன்கறிவர். அவருடைய கடின உழைப்பே அதற்குக் காரணம்.

அது மாத்திரமல்ல அன்னாரிடம் தூய ஆவியின் விசேட வல்லமையை சகலரும் காணக்கூடியதாகவுள்ளது. கிழமையின் ஒவ்வொரு வெள்ளியும் அவர் நடாத்தும் ஜெப ஆராதனை அதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். திருகோணமலை மாவட்டத்தில் இருந்து மாத்திரமல்ல வெளிமாவட்டத்தில் இருந்து எத்தனையோ பொதுமக்கள் தத்தமது குறைகளை இந்த ஜெப ஆராதனை மூலம் நிவர்த்தி செய்துள்ளனர்.

பேய், பசாசுகளைத் துரத்தும் வல்லமையை மாத்திரம் அவர் கொண்டிருக்கவில்லை தீராத நோய்களையும், தீராத பிரச்சினைகளையும் தீர்த்து துன்பப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்கப்பட்டமையை இங்கு விசேடமாகக் குறிப்பிட்டாக வேண்டும்.

அன்னையின் வருடாந்தத் திருநாளை மிகச்சிறப்பாக மேற்கொண்டு சகல இன மக்களினதும் பாராட்டைப் பங்குத் தந்தை பெறத் தவறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர் வளர்க்கும் பிராணாயாமம்

ஒரு மனிதனுக்கு பிராணன் போய் விட்டது என்றால் உயிர் போய் விட்டது என்று தான் பொருள். உயிருக்கு அடிப்படையானது காற்று. உணவில்லாமல் கூட சில நாட்கள் தாக்குப்பிடித்து விடலாம். காந்திஜீ அவ்வப்போது உண்ணாவிரதம் இருந்தவர்தான். அந்தக் கால முனிவர்களும் யோகிகளும் கூட நிறைய நாள் சாப்பிடாமல் இருந்திருக்கிறார்கள். நீர் இல்லாமல் கூட ஒரு நாள் இருநாள் இருந்து விடலாம். ஆனால் காற்று இல்லாமல் நிமிடக்கணக்கில் உயிர் வாழமுடியாது. ஆரோக்கியமாக உயிர்வாழ காற்றுத்தான் அவசியம். சுத்தமான ஒக்சிசன் என்றாலே அது பிராண வாயுதான். சராசரி மனிதன் சுவாசிக்கும் காற்று நுரையீரலுக்கு முழுவதுமாகச் செல்வதில்லை. பிராணாயாமம் செய்யச் செய்யத்தான் நுரையீரலும் மூளையும் வலுப்படும். பிராணாயாமம் செய்கையில் நுரையீரலில் உள்ள பழைய காற்று வெளியேற்றப்பட்டு சுத்தமான காற்று அதிகளவில் உள்ளே செல்கிறது. இதனால் மூளைக்கு இரத்தமும் அதிகமாகப் பாயும். பிராணாயாமத்தில் 1: 4: 2 என்பது உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை. அதாவது காற்றை உள்ளிழுப்பது ஒரு எண்ணிக்கை எனில் அடக்குவது நான்கு எண்ணிக்கை, வெளிவிடுவது இரண்டு எண்ணிக்கை. இதனையே இரண்டு மடங் காக்கி 2: 8: 4 என்றும் வைத்துக் கொள்ளலாம். வீட்டில் அமர்ந்து கொண்டோ திறந்த வெளியிலோ இதைச் செய்யலாம். முதலில் இடது நாசியை மூடிக்கொண்டு வலது நாசி வழியாகக் காற்று முழுவதையும் வெளியில் விடவேண்டும். பின் வலது நாசியை மூடிக்கொண்டு இடது நாசி வழியாகக் காற்றை உள்ளே இழுத்து இரு நாசிகளையும் மூடி காற்றை உள்ளே நிறுத்தி பின் வலது நாசி வழியாகக் காற்றை வெளியே விடவேண்டும். இப்படியே மாறி மாறிச் செய்ய வேண்டும். இதனால் நுரையீரலுக்கு சுத்தக்காற்று அதிகளவில் கிடைக்கிறது. சுத்தமான காற்றுத்தான் இரத்தத்தைச் சுத்தமாக்கும். சுத்த இரத்தம் இருந்தால்தான் மூளையும் உடம்பும் ஆரோக்கியமாக இருக்கும்.



பிராணாயாமம் செய்யும் போது வயிறு காலியாக இருக்க வேண்டும். காலை நேரமே பிராணாயாமம் செய்வதற்கு ஏற்றது. வேறு நேரங்களில் மாலையிலோ இரவிலோ செய்வதென்றால் உணவு உண்டு ஆறு மணி நேரத்தின் பின்பே செய்ய வேண்டும். ஒழுங்காகவும், தொடர்ச்சியாகவும் செய்து வரவேண்டும். ஆரம்பத்தில் இரண்டு அல்லது மூன்று பிராணாயமம் செய்தால் போதுமானது! காலப் போக்கில் வசதிக்கேற்ப மெதுவாகக் கூட்டலாம். பிராணாயாமம் செய்துவர உடல் சூடாகும். பால், பழம், கீரை வகைகளை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்வது நல்லது. மாமிச உணவுகளைத் தவிர்ப்பது அல்லது குறைத்துக் கொள்வது சிறப்பு.

பிராணாயமம் செய்யுமுன் உடலை இளக்கி மனதை அமைதியாக வைத்துக் கொள்ள வேண்டும். காற்றை உள்ளிழுக்கும் போது ஆரோக்கியம், மகிழ்ச்சி நமக்குள் சேர்வதாக நினைத்துக் கொள்ள வேண்டும். காற்றை வெளிவிடும் போது துன்பம், நோய்கள் அனைத்தும் நம்மை விட்டு வெளியேறுவதாக நினைக்க வேண்டும். பிராணாயாமம் தொடர்ந்து செய்துவர நோய்கள் அகன்று உடல் ஆரோக்கியமும், உற்சாகமும், புத்துணர்ச்சியும் அடையும். மனம் கட்டுப்படும். முகம் பிரகாசமாகும். பிராணாயாமம் செய்து முடிந்தபின் குறைந்தது இரண்டு நிமிடங்களாவது நாம் வணங்கும் தெய்வத்தை நினைத்து, அல்லது ஒரு பூவை, ஒளியை நாம் விரும்பும் ஒன்றை நினைவில் நிறுத்தித் தியானிப்பது மிகவும் நல்லது.

— சித்தன் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரிசுப்போட்டி !**



**பிள்ளைகளுக்கு மட்டும்**

**முடிவுத்திகதி :– 30 . 11 . 2003**

**விவிலியம் கற்போம் - 28**

## மோசே எகிப்துக்குத் திரும்புதல்

*(விடுதலைப் பயணம் - 4 : 18-31)*

மோசே தன் மாமனார் இத்திரோவிடம் சென்று, 'எகிப்திலுள்ள என் இனத்தவரிடம் ...................... திரும்பிப் போகவும், அவர்கள் .......................... உயிரோடிருக்கிறார்களா என்று பார்க்கவும் வேண்டும்' என்று அனுமதி கேட்க அவரும் விடை கொடுத்தார். மோசே தம் மனைவியையும் தம் புதல்வர்களையும் அழைத்துக்கொண்டு ..................... நாட்டுக்குச் சென்றார். ஆண்டவர் மோசேயை நோக்கி, '..............................., நீ எகிப்திற்குத் திரும்பிச் சென்ற பின், நான் உன் கையில் ஒப்படைத்துள்ள எல்லா அருஞ்செயல்களையும் பார்வோன் முன்னிலையில் .......................... காட்டு. நான் அவன் இதயத்தைக் கடினப் படுத்துவேன், அவன் மக்களைப் போகவிடமாட்டான். நீ பார்வோனிடம், ஆண்டவர் ........................... கூறுகிறார், இஸ்ராயல் என் மகன், என் தலைப் பிள்ளை. நான் உனக்குக் கூறிவிட்டேன்: என்னை வழிபடுமாறு என் மகனைப் போகவிடு, ....................... அனுப்ப நீ மறுத்துவிட்டால் நானே உன் மகனே, .......................... தலைப் பிள்ளைகளை வெட்டி வீழ்த்தப் போகிறேன் என்று சொல்லுவாய்' என்றார். இதற்கிடையில் ஆண்டவர் ஆரோனை நோக்கி, 'மோசேயைச் சந்திக்க பாலைவனத்திற்குப் போ' என்றார். அவரும் சென்று, மோசேயைச் சந்தித்து முத்தமிட்டார். மோசேயும் ஆரோனும் ............................ மக்களின் பெரியோர்கள் அனைவரையும் ......................... கூட்டினார்கள். அருஞ்செயல்களையும் செய்தபோது, மக்களும் நம்பினார்கள்.

**விடைகள்:** ***செய்து, ஒன்று, நான், இஸ்ராயல், இவ்வாறு, இன்னும், உன், அவனை, பார், எகிப்து***

❊ (வினாப்படிவத்திலேயே விடைகளை அனுப்புதல் வேண்டும். வேறாக அனுப்பப்படும் விடைகள் போட்டிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்கு மட்டும்
முடிவுத்திகதி
30 – 11 – 2003

# பரிசுப் போட்டி!

## அறிவை வளர்ப்போம் ~ 28

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. இலங்கையை இந்தியாவிலிருந்து பிரிக்கும் பாக்குநீரிணையின் நீளம்.

   (32 கி.மீ, 35 கி.மீ, 29 கி.மீ)

2. உலகில் அதிக சனத்தொகை உள்ள நகரம்

   (நியூயோர்க், பம்பாய், டோக்கியோ)

3. சாகுந்தலம் காவியத்தை இயற்றியவர்

   (வால்மீகி, கம்பர், காளிதாசர்)

4. பண் பழம்பஞ்சுரம் இக்காலத்தில் இவ்வாறு அழைக்கப்படுகிறது.

   (மோகனம், கல்யாணி, சங்கராபரணம்)

5. சதுர் அகராதியை உருவாக்கியவர்

   (ஆறுமுகநாவலர், உ. வே சாமிநாதையர், வீரமாமுனிவர்)

6. செப்டம்பர் மாதத்தில் நினைவு கூரப்பட்ட தூது சென்ற தமிழ் அறிஞர் இவர்

   (டாக்டர் மு. வரதராசனார், டாக்டர் க.ப அறவாணன்,

   தவத்திரு தனிநாயகம் அடிகள்)

பெயர் : ........................................................................

முகவரி : ........................................................................

........................................................................

........................................................................



அனுப்ப வேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம்/ அறிவை வளர்ப்போம் - 28
தொண்டன்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவிலியம் கற்போம் 26 விடைகள்

இத்திரோவின், ஒரேபை, நெருப்பால், முட்புதரின், பாதங்களிலிருந்து, கடவுள், கண்களால், எழுப்பும், இறங்கி, எகிப்திலிருந்து,

## அறிவை வளர்ப்போம் 26 விடைகள்

1. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, 2. ஆபிரகாம் லிங்கன், 3. ஹொங்கொங்
4. இந்தியா, 5. மெண்டரின், 6. ஒன்பது,

இருபோட்டிகளுக்கும் சரியான விடை அளித்து கிறிஸ்தவ இசை நாடா பரிசு பெறுவோர்,

ஒடேலியா ரூபகீர்த்தி
இல: 140, எல்லை வீதி
செங்கலடி

எ. நிஷாந்தினி
7E குமரத்தன் கோயில் வீதி
பெரிய ஊறணி
மட்டக்களப்பு

**ஒரு பிரிவிற்கு மட்டும் சரியான விடைகளை எழுதி 50 /= பரிசு பெறுவோர்.**

றோ. றொட்ணி
இல. 67 4ம் குறுக்குத் தெரு.
கருணைப்புரம்
வாழைச்சேனை

K. அஜித் பிரதீஸ்
25/1 வெயிலி குறுக்கு வீதி
மட்டக்களப்பு

**பாராட்டுப் பெறுவோர்.**

ஜெயசீலன் டினோஜன்
56, மரியாள் வீதி
திருகோணமலை

அ. கொன்சிஸ்ரா
கருணா நிவாசா
லிங்க நகர்
திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka

# காற்றிலே கலந்து வரும்...

## இலங்கை வானொலி தேசிய சேவையில் கத்தோலிக்க தமிழ் நிகழ்ச்சிகள் நவம்பர் - 2003

**கத்தோலிக்க நற்சிந்தனைகள்**

காலை :- 5. 50 மணி

நாள் :- 01, 02, 03, 04 - அருள்தந்தை யூஜின் போல் ஜொனத்தன்
:- 05, 06, 07, - அருட்சகோதரி எஸ். எலிசபெத் அ.கா
:- 15, 16, 17, 18 - அருட்தந்தை அன்ரனி ஜெயராஜ்
:- 19, 20, 21 - அருள் சகோ. பிரைனர்

**சிறுவர் உலகம்** (சிறுவர் நிகழ்ச்சி)

மாலை :- 8. 45 மணி

நாள் :- 11 - அஷலியா அல்பேட்
25 - தொகுப்பு மலர்

**புதிய உலகம்** (வளர்ந்தோர் நிகழ்ச்சி)

மாலை :- 8. 00 மணி

நாள் :- 09 - தொகுப்பு மலர்
23 - செல்லத்துரை ஜெயராஜா

நிகழ்ச்சித் தொகுப்பு
மலர்வேந்தன்

. தொடர்பு:
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு.

St. Ignatius Type Setting - 28, Sinnalebbe Street, Batticaloa.
Printing & Cover Desiging - St. Joseph's Catholic Press, Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org